உ

ஸ்ரீவடிவாம்பாள்துணை.

தஞ்சைமாநகரம்

மஹாசமஸ்தான் சரஸ்வதிமாலில் கிடைத்த

ஏட்டுப்பிரதியின்படி

இந்துகுடும்ப

அனுபோக

வயித்தியராஜாதினசிந்தாமணி

முதற்பாகம்.

தஞ்சாவூர் சர்போஜிமகாராஜாவினிடத்தில்

பரிசுபெற்ற

ஈரோட் நேடிவ்டாக்டர்

வரதராஜலுநாயுடு அவர்களால்

எழுதி முடிவுபெற்று.

சிறுமணவூர்

முனிசாமிமுதலியாரால்

சித்தூர்

வீராசாமிநாயுடுகுமாரர்

கேசவலுநாயுடு

அண்டுபிரதர்ஸ் அவர்களது,

சென்னை.

வித்தியாவிநோத அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

பெரம்பூர் பாரக்ஸ் ஐரோட் சூளை.

விளம்பரம்.

பதினோராவதுநிகண்டு சுத்தப்பிரதி
விசேட கருத்துரையுடன்
பாணாசுரநாடகம் படத்துடன்
சாலவினோததிரட்டு 600 பாடல்
சகாதேவன் சோதிடநாடி
சுருக்குபஞ்சபட்சி

இராமதேவர் உரோமரிஷி
சோதிடசிந்தாமணி

அங்கசூதிசாஸ்திரம்
சகாதேவர்செய்த108-லக்கமும்
சந்தனக்குரடும்

வைத்திய-வைத்தியாநந்தலகிரி
சத்தகராதி
அநுபோக ஆயுள்வேதச்சுருக்கம்
தருமநாடகம்
மாம்பழக்கவிராயர் இதாமிர்தசாரம்
பெரியபுஸ்தகம்
ஏகாதசிபுராணமென்னும்ருக்குமாங்
கதபடலம் உரையுடன்

கௌசிகசிந்தாமணி முதல்பாகம்
ஷ இரண்டாம்பாகம்
சற்கஜோசியம்

இத்துடன் உயர்ந்த கிளேஸ்காகிதத்தில் சுத்தப்பிரதியாய்
அச்சிட்டிருக்கும்புஸ்தகங்கள்.

அருணகிரிநாதர்வகுப்பு
கல்லாடம் உரையுடன்
சடகோபரந்தாதி உரையுடன்
பாடுதுறை
விநாயகபுராணவசனகாவியம்

ஞானவாசிட்ட விசேடகருத்துரை
யுடனசுத்தப்பிரதி
பாகவதபுராணம்செய்யுள் 9000
கம்பராமாயணம் செய்யுள் 12000
பாகவதபுராணம் வியாசர்பாகவதத்
திற்கிணங்கவசனம்.

இப்போது அச்சிட்டுவரும் புஸ்தகங்கள்.

ஓராசாஸ்திரம் உரையுடன்
பழனிஸ்தலபுராணம் உரையுடன்
தாயுமானவர்பாடல் சைவசித்தாந்தஉரையுடன்
விவேகசிந்தாமணி உரையுடன்

இவைகள் கூடிய சீக்கிரத்தில் வெளியிடப்படும் கடிதம் எழுதுவோர் சென்னை பெரம்பூர் பாரக்ஸ் ஐரோட்டு வித்தியாவிநோதம் பிரஸ் சி. வீ, கேசவலுநாயுடு யிடத்திலும், கோயமுத்தூரில் எமது சி. வீ. வகைபுஸ்தகஷாப்புக்கும் எழுதி தருவித்துக்கொள்ளலாம்.

ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்ட்டு இன்றி விடையனுப்பப்படுவதல்லை.

இப்படிக்கு,
சி. வீ. கேசவலுநாயுடு,

உ

கடவுள்துணை.

முகவுரை.

மண்டலத்தின்கண்வசிக்கும் ஆன்மாக்களுக்கு எளிதினுணரும்படி பதினெண் சித்தர்களும் கருணைகூர்ந்து ஒவ்வொரு சித்தர்கள் ஒவ்வொரு முறைகளை அனுபோகம்செய்துவந்த ஏட்டுப்பிரதியை தஞ்சைமாநகரம் மஹாராஜா சமஸ்தானத்தில் சரஸ்வதிமாலில் கிடைத்த ஏட்டுப்பிரதியை சிறுமணவூர் முனிசாமிமுதலியாரால் சீர்திருத்தி இந்து குடும்ப அனுபோகவயித்திய இராஜரத்தினசிந்தாமணிபரப்பிர்ம்மரகசியமென்று திருப்பெயரமைத்து இந்நூலை முதற்பாகம் அரிச்சுவடியைப் போல் கலன்பிரித்து அச்சிட்டு வெளியிடலாயிற்று.

	ரூ	அ	பை
இதன்விலை பிரதி 1-க்கு	0	8	0
வி-பி. சார்ஜ்	0	3	0

10-புத்தகம் ஒரேதடவையில் வாங்கினால்

1-புத்தகம் கமிஷன்கொடுக்கப்படும்

வியாபாரிகட்கு தகுந்த லாபங்கொடுக்கப்படும்.

இப்படிக்கு,

சிறுமணவூர் முனிசாமிமுதலியார்.

உ

தஞ்சாவூர்

இந்துகுடும்ப அனுபோக

வயித்திய இராஜரத்தினசிந்தாமணி

அட்டவணை.

விஷயம்	பக்கம்.	விஷயம்	பக்கம்.
	சுத்திவகைப்படலம்.		
பவழசுத்தி	௯	அஞ்சனக்கல்சுத்தி	௧௨
லிங்கசுத்தி	,,	நாகசுத்தி	,,
கெவுரிசுத்தி	,,	தாம்பரசுத்தி	,,
வீரசுத்தி	,,	நாகசுத்தி	,,
பூரசுத்தி	,,	காந்தசுத்தி	,,
வெள்ளைசுத்தி	,,	காரீயசுத்தி	,,
குதிரைப்பல்லிசுத்தி	,,	பொன்னிமிளைசுத்தி	,,
சிலைசுத்தி	,,	அபிரேக்குசுத்தி	௧௩
அரிதாரசுத்தி	,,	கல்மதச்சுத்தி	,,
சிலாசத்துசுத்தி	,,	நேர்வாளச்சுத்தி	,,
கஸ்தூரிசுத்தி	,,	சேங்கொட்டைசுத்தி	,,
கெருடபச்சைசுத்தி	,,	சிவதைசுத்தி	,,
சிவக்காரசுத்தி	,,	அமுக்கராவேர்சுத்தி	,,
பொரிகாரசுத்தி	,,	அறுபத்துநால்சரக்குசுத்தி	,,
குக்கிலசுத்தி	,,	ரசம்சுத்தி	,,
குந்திரிக்கஞ்சுத்தி	௧௧	கெந்தகசுத்தி	,,
காரசத்துக்குசுத்தி	,,	தாளகம்சுத்தி	௧௪
கெந்திசுத்தி	,,	வெள்ளைபாஷாணசுத்தி	,,
ரசப்சுத்தி	,,	சாதிலிங்கம்சுத்தி	,,
முடிதாரசுத்தி	,,	மனோசிலைசுத்தி	,,
தாரசிங்கிசுத்தி	,,	ரத்தம்துருசுசுத்தி	,,
தொட்டிப்பாஷாணச்சுத்தி	,,	வெங்காரம்சுத்தி	,,
மயில்துத்தம்சுத்தி	,,	கமரிசுத்தி	,,
துருசுசுத்தி	,,	[illegible]பாஷாணஞ்சுத்தி	,,
சகஸ்திரபேதிசுத்தி	,,	[illegible]சுத்தி	,,

விஷயம்.	பக்கம்
சிவதைசுத்தி	௧௫
எண்ணெய்சுத்தி	,,
ஊமத்தன்விரைசுத்தி	,,
சுக்குசுத்தி	,,
எட்டிகொட்டைசுத்தி	,,
மாசிக்காய்சுத்தி	,,
சூரணவகைப்படலம்.	
சுத்திற்குசூரணம்	௧௬
அசுவகெந்திசூரணம்	௧௭
அறுவகைச்சூரணம்	,,
ஈளைஇருமலுக்குசூரணம்	௧௮
தாளிசபத்திரிசூரணம்	,,
நிலாவிரைச்சூரணம்	,,
திராட்சாதிசூரணம்	௧௯
ஏலாதிச்சூரணம்	,,
மகா ஏலாதிச்சூரணம்	௨௰
கர்ப்பூராதிச்சூரணம்	௨௧
மகா அசுவகெந்திச் சூரணம்	௨௨
காமாலைவீக்கமகோதய சூரணம்	,,
தாவாகக்கினிசூரணம்	,,
விளங்காதிச்சூரணம்	௨௩
வேலி இஞ்சிச்சூரணம்	,,
கட்டுமூலக்கு கூக்குடாதிச் சூரணம்	௨௪
பூபகிச்சூரணம்	௨௫
இருமல்திர இண்டாதிச் சூரணம்	,,
அதிசாரக்கிராணிகள்தீர தாடிமச்சூரணம்	,,
[illegible]ந்தகாதிச்சூரணம்	௨௬

விஷயம்.	பக்கம்.
ஏலப்ஞுகிச்சூரணம்	௨௬
காய்ச்சல்கிராணிக்குமாதளச்சூரணம்	௨௭
மூலத்துக்குசூரணம்	௨௮
இஞ்சிச்சூரணம்	,,
பரங்கிப்பட்டைச்சூரணம்	,,
புடம்போடும்வகை	௨௯
செந்தூரவகைப்படலம்.	
அயக்காந்தச்செந்தூரம்	௩௰
அயச்செந்தூரம்	,,
அரிதாரச்செந்தூரம்	௩௧
காடிகாரச்செந்தூரம்	,,
லோகச்செந்தூரம்	௩௨
காளகச்செந்தூரம்	,,
ரசச்செந்தூரம்	,,
சண்டமாருதச் செந்தூரம்	௩௩
அயக்காந்தச்செந்தூரம்	,,
கல்லுப்புசெந்தூரம்	௩௪
உப்புசெந்தூரம்	,,
சாங்கச்செந்தூரம்	௩௫
பற்பவகைப்படலம்.	
இரசபற்பம்	௩௬
அண்டபற்பம்	,,
அரிதாரபற்பம்	,,
நாளகபற்பம்	௩௭
தாளகபற்பம்	,,
கெந்தகபற்பம்	௩௮
தாம்பரபற்பம்	,,
வங்கபற்பம்	,,
துருசுபற்பம்	,,

அட்டவணை.

விஷயம்,	பக்கம்.
கல்கபற்பம்	௩௮
நிலஆவாரைபற்பம்	,,
காரீயபற்பம்	௩௯
பவழபற்பம்	,,
கல்லிகாம்புபற்பம்	,,
ஞமறிபற்பம்	௪௰
சிமைகல்நார்பற்பம்	,,
காட்டுக்கல்நார்பற்பம்	,,
அரிதாரபற்பம்	௪௧
பொட்டிலுப்புபற்பம்	,,
கல்லுப்புபற்பம்	,,
வெள்ளைபாஷாணபற்பம்	,,
பூரபற்பம்	௪௨
மாத்திரவகைப் படலம்.	
பேதிக்குபூபதிமாத்திரை	௪௩
வயறுவலிக்குமாத்திரை	,,
இரவு அயராதுமாத்திரை	,,
வெட்டிவேர்மாத்திரை	௪௪
காலாமுறைகாய்ச்சலுக்கு மாத்திரை	,,
குளிர்காய்ச்சலுக்கு சீதாராமபாணம்	௪௫
கிராணி [illegible]கபாடமாத்திரை	,,
ஜன்னிசுரத்திற்கு மகாவைரவரசம்	௪௬
குளிர்காச்சலுக்கு ப்ரதாப[illegible]ரசம்	௪௭
சகலசுரங்களுக்கு அமுகிய சொர்ணகுளிகைகள்	,,
குழந்தைகள் சுரத்திற்கு சுத்தி பேதி	௪௮

விஷயம்.	பக்கம்.
குழந்தைகளுக்கு பேதிக்கு	௪௮
சுரத்துக்கு ஆனந்தபைரவன்	
விஷசுரத்துக்கு குளிகை	௪௯
சன்னிக்குரா[illegible]திக்குளிகை	
சுரத்துக்கு ஏலாதிகுளிகை	
சீதசுரத்திற்கு குளிகை	௫௰
சுரத்திற்குமாத்திரை	,,
யாளசஞ்சீவிமாத்திரை	,,
[illegible]வறுள்தம்	௫௧
பிள்ளைகளுக்கு சுரத்திற்கு மாத்திரை	,,
பெருவாரிகாய்ச்சலுக்கு மாத்திரை	,,
விஷபேதிக்குமாத்திரை	,,
கோரோசனைமாத்திரை	௫௨
சின்னயேலாதிமாத்திரை	,,
சுரத்துக்குமாத்திரை	௫௩
[illegible]லபூபதிமாத்திரை	,,
பாலசஞ்சீவிகுளிகை	,,
பஞ்சசுரத்தினகுளிகை	௫௪
குழந்தைவாகடம்.	
இருபத்தொன்றுமாந்த ரோகமவகை	௫௫
மாந்தரோகங்களின் குணம்	;
மாந்தத்துக்கு பச்சிலை சாறு	௫௬
மாந்தத்துக்குகுழம்பு	,
மாந்தத்துக்குகுடிநீர்	,,
மாந்தத்துக்குகியாழம்	௫௭
மாந்தத்துக்கு குளிகை	௫௭
அறுபானம்	,,
உள்மாந்தம் உட்சுரம் எலும்புரிக்கிக்குமருந்து	௫௮

விஷயம்.	பக்கம்
சூழிகணை உப்பிசம்கோழைக்கட்டு இளைப்புக்குமருந்து	,,
மாந்ததோஷம் வரப்புமலக்கட்டுக்குமருந்து	௫௭
மாந்த வயிறுவலிசெறியா மாந்தத்துக்குமருந்து	,,
மாந்தவலிப்பு காக்கைவலிப்புக்குமருந்து	,,
மாத்தவீக்கம் விஷவீக்கம் சுரம்நீர்கட்டுக்கு கியாழம்	௫௯
உப்பல்மாந்தத்துக்குமருந்து	
அமுர்தாதிகுளிகை	,,
சிக்கல் வயிற்றுக்கடுப்புக்கு	௬௰
சீதக்கடுப்புக்குமருந்து	,,
அதிமதுரமாத்திரை	
அமிர்தசஞ்சீவிகுளிகை	,,
பேதிக்கு அமிர்தசஞ்சீவிலிங்கக்குழம்பு	௬௧
பூபதிமாத்திரை	,,
பேதிபூபதிமாத்திரை	௬௨
ஏலாதிமாத்திரை	
கட்டுவாதிமாத்திரை	,,
கற்பூராதிமாத்திரை	௬௩
கோடாசூழிமாத்திரை	,,
கோரோசனைமாத்திரை	,,
சஞ்சீவிகுளிகை	௬௪
விரோசனரண்பகப்பூமாத்திரை	
கஸ்தூரிமாத்திரை	௬௫
குருமாத்திரை	,,
பூசமாத்திரை	,,

விஷயம்.	பக்கம்.
வில்வாதிமாத்திரை	௬௫
இரசச்செந்தூரமாத்திரை	௬௬
பாலசஞ்சீவிமாத்திரை	,,
இராமபாணக்குளிகை	,,
ஏலாதிமாத்திரை	௬௭
இருமலுக்குசூரணம்	
சஞ்சீவிகுளிகை	,,
பேதிமாத்திரை	௬௮

எண்ணைவகைப்படலம்.

ஜாதிக்காயெண்ணை	௭௰
கொதிப்புசணத்திற்கு எண்ணெய்	௭௧
மாந்தப்பொருமலுக்கு எண்ணெய்	,,
எரிகணத்திற்கு எண்ணை	௭௨
முக்குற்கணத்திற்கு எண்ணெய்	,,
உலர்ந்ததேகத்திற்கும் பதினெட்டு கணம்வெட்டை சுரத்திற்கு எண்ணெய்	
தோஷம் ஒன்பதுமாந்தம் ஒன்பது பதினெட்டுகணத்திற்கு எண்ணெய்	௭௩
மாந்தகேசரி எண்ணை	,,
தேங்காய் எண்ணை	௭௪
மாந்தத்திற்குநல்லெண்ணை	,,
சூரியபுடநல்லெண்ணை	,,
சன்னிசுரத்திற்குவேப்பெண்ணை	௭௫
கரப்பானுக்கு எண்ணை	,,

அட்டவணை.

விஷயம்.	பக்கம்.	விஷயம்.	பக்கம்.
மேகவியாதிகளுக்கு நிலக்கடம்பையிலெண்ணை	௭௬	காதில்சீழ்வடிதலுக்கு எண்ணை	௭௮
மேகத்திளைத்தவர்களுக்குநல்லெண்ணை		சித்தாதியெண்ணை	,,
குளிர்ச்சியெண்ணை	௭௭	தினவுக்குபூசஎண்ணை	௭௮
மண்டைகுடைச்சலுக்கு எண்ணை	,,	கண்டமாலைக்குஎண்ணை	
		அரக்கெண்ணை	௭௯

தஞ்சாவூர்

இந்துகுடும்ப

அனுபோக

வைத்தியஇராஜரத்தினசிந்தாமணி

அட்டவணை முற்றிற்று.

உ

[illegible]

உ

ஸ்ரீவடிவாம்பாள் துணை.

தஞ்சைமாநகரம்,

மகாராஜ சமஸ்தானத்தில் வழங்கிக்கொண்டிருந்த

இந்துகுடும்ப அனுபோகவயித்திய

இராஜரத்தினசிந்தாமணி

பரப்பிரம்மரகசியம்.

முதலாவது

சரக்குகளின் சுத்திவகைப்படலம்.

பவழசுத்தி-ஆழாக்கு பசுவின் மோரில் கிளியாய்க்கட்டி மூன்று கடிகை ஊறப்போட்டெடுத்து உலர்த்திக்கொள்ள சுத்தியாகும்

லிங்கசுத்தி-பழச்சாறு- முலைப்பாலு - குப்பமேனிச்சாறு இம்மூன்றுஞ் சமனாய்ச்சேர்த்து லிங்கத்திற்கு சுறுக்கொடுக்க சுத்தியாகும்.

அஷ்டலோகமாரணம் நவலோகமேழும் தீரும்.

செவ்விசுத்தி-பன்றிப்பாலில் அவித்திட சுத்தியாகும் கிளியாய்க்கட்டி ஒருகடிகைநேரம் நிழலிலுலாத்திஎடுக்கவும்.

வீரசுத்தி- ஒரு இளநீரில் கவ- வீராகனிடை கர்ப்பூரம்சேர்த்து அவித்தால் சுத்தியாகும்.

பூரசுத்தி-வெற்றிலையும் மிளகும் கியாழஞ்செய்து பூரத்தைக்கிளியாய்க்கட்டி மூன்றுநாள் ஊறவைத்திட சுத்தியாகும்.

வெள்ளைசுத்தி—மிளகை அரைத்து ஒருபடி தண்ணீரில்கலக்கி வெள்ளையைகிளியாய்க்கட்டி தண்ணிசுண்டு மட்டும் காய்ச்சியெடுத்து கழுவி உலர்த்திவைத்துக் கொள்ளவும்.

குதிரைபல்லிசுத்தி—உமிநீரில் மூன்றுகடிகைவூறப்போட்டுஉலர்த்திட சுத்தியாகும்.

சிலைசுத்தி—ஆழாக்கு காடியில் கிளிபாய்க்கட்டிப்போட்டு மூன்றுகடிகை அவித்திட சுத்தியாகும்.

அரிதாரசுத்தி— கல்சுண்ணாம்பு படி கால், குப்பமேனிச் சாறு படிகால், அமுரி ஆழாக்கு ஒருகடிகைசுருக்காகக்காய்ச்சி உலர்த்திட சுத்தியாகும்.

சிலாசத்துசுத்தி—எலுமிச்சம் பழச்சாரில்காய்ச்சி உலர்த்திப்போட்டு பின்பு இரண்டுநாள்எருக்கம்பாலில்ஊறவைத்து கழுவிப்போட சுத்தியாகும்.

கல்நாரிசுத்தி— கழுதைநீரில் மூன்று கடிகை வாட்டிப்போட சுத்தியாகும்.

கெருடபச்சைசுத்தி—பயறுபோலதட்டி கிளியாய்க்கட்டி குமரிச்சாற்றில் முப்பதுகடிகை காய்ச்சியெடுத்து கழுவிஉலர்த்திவைத்துக்கொள்ளவும்.

சினக்காரசுத்தி— ஆவின்பாலில் ஆட்டி ஊறவைக்க சுத்தியாகும்.

பொரிகாரசுத்தி—கிளியாய்க்கட்டி எருமைச்சாணம் சாற்றில் கொதிக்கவைத்து கழுவிப்போட சுத்தியாகும்.

குக்கிலசுத்தி—எருமைமோரில் ஊறப்போட்டு எடுக்கசுத்தியாகும்.

குந்திரிக்கஞ்சுத்தி—நாள் முழுமையும் சாருயத்தில் ஊரப்போட்டெடுக்க சுத்தியாகும்.

காரத்துக்குசுத்தி—மூன்று நாள் மூத்திரத்தில் அவிக்க சுத்தியாகும்.

கெந்திசுத்தி—பசுவின் வெண்ணெய்விட்டு இரும்புகரண்டியில் உருக்கி பாலில்ஈறஞ்சு நாம் சாய்க்கசுத்தியாகும்.

ரசம்சுத்தி—புகையூரலும் - மஞ்சளும் - செங்கல் தூளும் பொடிசெய்து அரைக்கசுத்தியாகும். மேனிச்சாறு-பிரண்டைச்சாறு-இஞ்சிச்சாறு - ஆவாரம்பட்டைக்கியாழம்- சித்திரமூலச்சாறு-திரிபலாதி கியாழம்- நாக பட்டைக் கியாழம் இவைகளில் சுத்திசெய்யவாலேகுதமாகசுத்தியாகும்.

முடிதாரசுத்தி—சாணிப்படி பனங்கள்ளில் கிளியாய்க்கட்டி எரித்தெடுத்துக் கழுவிப்போடவும்.

தாரசிங்கிசுத்தி—ஆட்டுநீரில் முதல்காய்ச்சியெடுத்துக்கொண்டு பிறகு மூலைப்பாலில் பத்துநாழிகையும்வெள்ளாட்டுப்பாலில் பத்துநாழிகையும் உலர்த்திப்போட்டெடுத்து கழுவிப்போட சுத்தியாகும்.

தொட்டிப்பாஷாணம்சுத்தி— பொடிப்பொடியாய் வெட்டிகிளியாய்க்கட்டி நெல்லில் அவித்துகழுவிப்போட சுத்தியாகும்.

மயில்துத்தம்சுத்தி—நல்ல பசும்வெண்ணெயில் இரண்டுநாள்ஊரப்போட்டுக் கழுவியெடுத்துக்கொள்ளவும்.

துருசுசுத்தி—நாலுபடி பசும்நீரில் வைத்தெரித்து கழுவிவெய்யலில் உலறப்போட்டு எடுத்துக்கொள்ளவும்.

சகஸ்திரபேதிசுத்தி—நாரத்தங்காய் சாற்றில் ஊரப்போட்டு கழுவி எடுத்துக்கொள்ளவும்.

அஞ்சனக்கல்சுத்தி—புளியாரை சாற்றில் ஒருநாள் ஊரப்போட்டு எடுத்துக்கொள்ளவும்.

நாகசுத்தி—நல் எண்ணெயில் ஒருநாள்முழுதும் ஊரப்போட்டெடுத்து மறுபடியும் எலுமிச்சம்பழச்சாற்றில் அறுபதுநாழிகை ஊரப்போட்டெடுத்து கழுவிவுலர்த்திக்கொள்ளவும்.

தாம்பரசுத்தி—அமுரியொன்று பழச்சாறொன்று சாரமும் தாளகமும் கூட்டி கலக்கி பத்துநாள்வெய்யலில்வைத்து நீரினால் கழுவிப்போட சுத்தியாகும்.

நாகசுத்தி—அமுரியில் கல்லுச்சுன்னங்கூட்டி பழச்சாறும்சேர்த்து நாகத்தை ஆட்டுநெய்யில் உருக்கிபத்துதரம்சாய்க்கசுத்தியாகும்.

காந்தசுத்தி—காணஞ்சாற்றில் காந்தத்தைக் காய்ச்சி ஏழுதரம் தோய்த்து கழுவிப்போட சுத்தியாம்.

காரீயசுத்தி—வெள்ளாட்டு நீரில்பிரண்டைவேரை அரைத்துப்போட்டு கலக்கிநல் எண்ணெயிட்டு வுருக்கிச் சாய்க்க கல்ல சுத்திநீர்சாகும்.

பொன்னிமிளைசுத்தி—மூன்றுநாள் காடியில் காய்ச்ச சுத்தியாகும்.

அபிரேக்குசுத்தி—அபிரேகத்தை பத்துநாள்காடியில் ஊறப்போட்டெடுக்க சுத்தியாகும்.

சல்மதச்சுத்தி—அமுரியில் கழுவி எடுத்துக் கொள்ளவும்சுத்தமாகும்.

நேர்வாளசுத்தி—நேர்வாளத்தைகிளியாய்க்கட்டி கனாத்த மீதிசணக் குழம்பில் போட்டுவெரித்து நன்றாய்எடுத்து உலர்த்தி கொட்டையை வுடைத்து நஞ்சைபோக்கி காடியோர் பழச்சாறு சேர்ந்து பருப்பைபத்துநாள் ஊறப்போட்டு வுலர்த்திவைத்துங்கொள்ளவும்.

சேங்கொட்டைசுத்தி—ஒருநாள் உதயத்தில் ஜலத்தில் போட்டு எடுத்து மறுநாள் உலர்த்திக்கொள்ளவும்.

சிவதைசுத்தி—பசும்பாலில் அவிச்சு அவிக்க சுத்தியாகும் உலர்த்திக்கொள்ளவும்.

அமுக்குறாவேர்சுத்தி-பாலில்அவிக்கசுத்தியாகும் மூலிகையெல்லாம் பாலில் அவிக்க சுத்தியாகும்.

அறுபத்துநாலு சாக்குகளின் சுத்தி-மேனிச்சாறு தக்காளிச்சாறு கையாந்தகரைச்சாறு மத்தையினச்சாறு பழச்சாறு அமுரிகூட்டி வுப்புச்சுன்னம் வெடிவுப்புகாரம் சீனம் பலம் க-கூட்டி அறுபத்துநாலு சாக்கும் சுத்தியாகும்.

ரசம் சுத்தி-கைத்தாமும்பாலில் ரசத்தை எழுநாள் ஊறப்போட்டால் சுத்தியாகும்

கெந்தகசுத்தி-கெந்தகம் பசும்பாலில் வேகவைத்தால் சுத்தியாகும்.

தாளகம் சுத்தி-தாளகத்தை பெருமபூசனிக்காய் சாற்றில்வேகவைத்து யெடுத்து பசும்பால் வார்த்து அரைத்துமுடிச்சுக்கட்டிபாலிலே யிட்டுகெட்டியிரக்கினால் சுத்தியாகும்.

வெள்ளைபாஷாணம் சுத்தி-வெள்ளைபாஷாணத்தைமுடிந்து கட்டி சுண்ணாம்பிலவீற்று சுத்தியாகும் அதின்பிறகு பசுவின்பாலில யிட்டுகெட்டவுஞ்சுத்தியாகும்.

சாதிலிங்கம் சுத்தி-சாதிலிங்கத்தை வெள்ளாட்டு கோமயத்தில் மூன்றுசாமம் ஊறப்போட்டால் சுத்தியாகும்.

மனோசிலைசுத்தி-மனோசிலையை அகத்திப்பூசாற்றில் இரண்டுநாள் ஊறபபோட்டால் சுத்தியாகும்.

துத்தம் துருசுசுத்தி-துத்தம்துருசு தயிரிலே ஒருநாழிகை ஊறினால் சுத்தியாகும்.

வெங்காரம்சுத்தி-வெங்காரத்தை ஆறுமாதக்காடியில் ஒருநாழிகை வூறினால் சுத்தியாகும்.

கமரிசுத்தி-கமரியை பசுவின்நெய்யில்போட்டு பொங்கினதின்பிறகு இறக்கு அந்தப்படிக்கு ஏழுசாம் பொங்கினதின் பிறகு சுத்தியாகும்.

எலிபாஷாணஞ்சுத்தி-எலிபாஷாணத்தை பசுவின்கோமயத்தில் ஏழுநாள்ஊறப்போட்டால் சுத்தியாகும்.

குங்கிலிய சுத்தி-குங்கிலியத்தை தேன்விட்டரைத்து முடிச்சுக்கட்டி வேகவைத்து தண்ணீரில் அறுபதுநாழிகை ஆறுமாதக்காடியில் அறுபதுநாழிகை பசுவின் கோமயத்தில் ஊறினால் சுத்தியாகும்.

சிவதைசுத்தி-சிவதை பசுவின்பாலில வேகவைத்தால் சுத்தியாகும்.

எண்ணெய்சுத்தி-சகலமான எண்ணெய்களையும் நல்லஜலத்தில்விட்டு நாலுநாழிகைசென்று எடுத்தால் சுத்தியாகும்.

ஊமத்தன்விரைசுத்தி-ஒருசாமம் ஜலத்தில் ஊறவைக்க சுத்தியாகும்

சுக்கு சுத்தி மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசிஉலர்த்தி யெடுத்துக்கொள்ளவும்.

எட்டிகொட்டைசுத்தி-நெல்லில் அவித்து சிறுநீராசத்தில் ஊறியபின் தேத்தான்கொட்டை ரசத்தில் வேகவைத்து எடுத்துக்கொள்ளவும்.

சீரகச்சுத்தி கருஞ்சீரகம் சீரகம் இவைகளை சுண்ணாம்புநீரில் ஏழுஜாமம் ஊறியபின் உலர்த்தியெடுக்கவும்.

மாசிக்காய்சுத்தி-பசும்நெய்யில் வருத்து வெடித்தபிறகு எடுத்துக்கொள்ளவும்.

௪௪ சுத்திவகைப்படலம்-முற்றிற்று.

அகஸ்தியர் அனுபோகம்.

இரண்டாவது.

சூரணவகைப்படலம்.

[-][*][-]

சுரப்பிரமாணம்.

வாதசுரம் நாள்	...	...	எ
சேட்டுமசுரம் நாள்	...	...	சூ

வாதபித்தசிலேட்டுமம் மூன்றும் கலந்தசுரம் நாள் யரு.

இது சுரப்பிரமாணமென்றறியவும்.

சுரத்திற்குசூரணம்.

சீரகம் விராகனிடை	ங	கையாந்தகரை விராகனிடை	கங
கடுக்காய் ...	ங	சடாமாஞ்சி ...	கஉ
நெல்லிபருப்பு ...	ச	சுக்கு ...	சங
தேத்தான்விரை	ய	கோரைக்கிழங்கு ...	கரு
பேரீச்சம்பழம்	சா	முசுமுசுக்கைவேர் ...	சூ
முந்திரிப்பழம் ...	கச	நல்லசந்தனக்கட்டை	கஎ
கொத்துமல்லி ...	அ	மஞ்சள்	கஅ
லவுங்கப்பட்டை ...	எ	காட்டெருமைப்பால்	ககூ
அதிமதுரம் ...	கூ	நெரிஞ்சிவேர் ...	உய
திப்பிலி ...	ய	தூதுவேளை ...	உரு
பெண்மாவைங்கிழங்கு	உரு		

இவை எல்லாம் சூரணஞ்செய்து வடிகட்டிக்கொண்டு சமனுக சர்க்கரைக்கூட்டி அபிகோகரு செந்தூரம் விராகனிடை-அ- இதிற்கலந்துபசுவின் நெய்யிலாவது தேனிலாவது இரண்டுவேளையும் விரகடிப்பிரமாணம் சாப்பிடவும் திரும்வியாதி திரிதோஷசுரம் நீரிழிவு ரத்தப்பிரமியம்சுக்கிலப்பிரமியம் மூத்திரக்குளச்சிசிக்குமூத்திரம்-நீர்கடுப்புவயர்எரிச்சல் ஒருதலைநோய்கிறுணிஎவிகடி

பேய்-சரிகஷ்டி-காமாலை-குஷ்ட-க்ஷயம்-பாண்டு-அதிகதாகம்-சரீர நடுக்கம் இத்தவியாதிகளெல்லாம் தீரும்.

அசுவகெந்திசூரணம்.

கிராம்பு	விராகனிடை	க	தாளிசப்பத்திரி	விராகனிடை	ரு
நாகப்பு	...	உ	பெருஞ்சீரகம்	...	சு
ஏலம்	...	ங	கொத்துமல்லி	...	எ
லவுங்கப்பட்டை	...	ச	மிளகு	... ...	அ
திப்பிலி	...	கசு	அமுக்குறாவேர்	...	சுச
சுக்கு		ஙஉ			

சேலத்துசர்க்கரைசமனாகச் சேர்த்து வெய்யலில் உலர்த்தி சூரணஞ்செய்து சர்க்கரையோடு கலந்துகொண்டுநெய்யிலாவதுதேனிலாவது சாப்பிடலாம் தீரும்வியாதி இருமல்சுரம் உஷ்ணம் முதலான சகலவியாதிக்கும் கொடுக்கலாம் இதில் அமுக்குறாவேர் சுத்திசெய்துக்கொள்ளவேண்டியது மற்றவகைகள் இளவறுப்பாய் செய்யவும் இச்சாபத்தியம்.

அறுவகைச்சூரணம்.

சீரகம்	பலம்	க	சின்னலவுங்கப்பட்டை	பலம்	க
அதிமதுரம்	...	க	சதகுப்பை	... ...	க
கிராம்பு	...	க	கொத்துமல்லி	...	சு
கருஞ்சீரகம்		க	சீனிகற்கண்டு		௰௨

சூரணம்செய்து கொண்டு அந்தி சந்திகொடுக்கவும் தீரும்வியாதி-சூலை எரிவு நெஞ்சுவலி சிரசுநோய் பித்தநீர் ஊரல் கண்ணீர் பாய்ச்சல் பெலன் நித்திரைசுகம் உண்டாகும் இருமிபூச்சி இடுப்புவலி கல்லடைப்பு பித்தம் செவிநோய்சேத்துமம் தொண்டைப்புண் சரீரத்தின் நீர் கட்டு இவையெல்லாம் தீரும் இச்சாபத்தியம்.

ஈளை இருமலுக்கு சூரணம்.

சுக்கு	பலம்	க	தாளிசபத்திரி	பலம்	உ
மிளகு	...	க	கொடிமுந்திரிகை	...	உ
திப்பிலி	...	க	சீரகம்	...	க
ஏலம்	...	உ	கோஷ்டம்	...	க

இவைகளை சூரணம் செய்து சேலம் சர்க்கரை சமனுப்சேர்த்து சாப்பிடவும் தீரும் வியாதி இருமல்பித்தவாய்வு பக்கசூலைசத்தி குன்மம் இச்சாபத்தியம்.

தாளிசபத்திரிசூரணம்.

தாளிசபத்திரி	பலம்	௰	லவுங்கப்பட்டை	பலம்	க
திரிகடுகு	...	க	அக்கிராகாரம்	...	க
திரிபலாதி	...	க	யானைதிப்பிலி	...	க
கோஷ்டம்	...	க	சீரகம் ...	...	ஈ
கொத்துமல்லி	...	க	கிராம்பு ...	...	க
வாய்விளங்கம்	...	க	ஏலம் ...	...	க
சாதிக்காய்	...	க	சடாமாஞ்சில்	...	க
சோம்பு ...	...	க	வால்மிளகு	...	க

இவைகளையெல்லாம் சூரணஞ்செய்து சர்க்கரை சமனுப்சேர்த்து கலந்துகொண்டு நெய்யில் இரண்டுவேளையும் சாப்பிடவும்தீரும் வியாதி அஸ்திசுரம் தாகம் பித்தவெட்டை பித்தபாண்டு கிராணி விம்மல் விக்கல் கைகாலெரிவு இவைகளெல்லாம் சாந்தமாகும் பத்தியம் புளி புகையாகாது.

நிலாவிரைச் சூரணம்.

நிலாவிரை	பலம்	க	மிளகு	பலம்	க
சுக்கு	...	க	வாய்விளங்கம	...	க
ஓமம் ...	...	க			

இவைகளை சூரணித்துக்கொண்டு சர்க்கரை பலம் ௫ சேர்த்து ஒரு காண்டிபிரமாணம் இரண்டுவேளையும் வெந்நீரில்கொள்ளவும்

தீரும் வியாதி மேகவியாதி புரையோடின ரணம் யாவும் தீரும் இச்சாபத்தியம்.

திராட்சாதி சூரணம்.

திராட்சப்பழம்	பலம்	உ	அலகிழங்கு	பலம்	உ
மூந்திரிப்பழம்	...	உ	அதிமதுரம்	...	உ
நெலதுபொரி	...	உ	பேரீச்சம்பழம்	...	உ
நன்னாரிவேர்	...	உ	கூகைநீர்	...	உ
வெட்டிவேர்	...	உ	நெல்லிபருப்பு	...	உ
கோரைக்கிழங்கு	...	உ	நல்லசந்தனம்	...	உ
சாதிக்காய்	...	உ	சாதிபத்திரி	...	உ
கிராம்பு	...	உ	சிறுநாகப்பூ	...	உ
பெருநாகப்பூ	...	உ	திப்பிலி	...	உ
ஏலரிசி	...	உ	கொத்துமல்லி	...	உ
விலாமிச்சம்வேர்	...	உ			

இவைகளைசூரணம் செய்து அதற்குசரியாகசர்க்கரைகலந்துபசுவின் பாலிலாவது பசுவின் நெய்யிலாவது தேனிலாவது இருகடிப்பிரமாணம் சூரணம் இரண்டுவேளையும் சாப்பிடவும் இதுகளில்தீரும் வியாதி தாகச்சுரம் பாண்டுரோகம் காமாலை ரத்தமூத்திரம் உள்ளங்கைஎரிச்சல் சிறுநீர்மஞ்சள் நிறமாயிறங்கிறது தலைகிறுகிறுப்பு மூர்ச்சை இதுகள்தீரும் கடும்பத்தியம்

ஏலாதிச் சூரணம்.

ஏலம்	விராகனிடை	வ	திப்பிலிமூலம்	விராகனி	௫
கிராம்பு	...	வ	மிளகு	...	௫
தாளிசபத்திரி	...	வ	சித்தரத்தை	...	௫
திப்பிலி	...	வ	சிறுதேக்கு	...	௫
சர்கடைசிங்கி	...	௫	இந்துப்பு	...	௫
வளையலுப்பு	...	௫	பொட்டிலுப்பு	...	௫

இதுகளெல்லாம் சூரணம்செய்து சர்க்கரைமூன்று பலம் கலந்து விராகனிடை சூரணம் எடுத்து பசுவின்நெய்யிலாவது தேனிலா

வது சாப்பிடவும் இச்சாபத்தியம் இதில் தீரும்வியாதிவாதகாம் காமாலை பாண்டுவகை அன்னத்து வேஷம் இதுகள்நீக்கும்.

மகாஏலாதிச் சூரணம்.

ஏலம் விராகனிடை	௫	சிறுநாகப்பூ விராகனிடை	௫
பச்சைகர்ப்பூரம் ,,	௫	சீரகம் ,,	௫
கிராம்பு ,,	௫	கருஞ்சீரகம் ,,	௫
லவுங்கப்பட்டை ,,	௫	பேரீச்சம்பழம் ,,	௫
லவுங்கபத்திரி ,,	௫	சடாமாஞ்சில் ,,	௫
அதிமதூரம் ,,	௫	சுக்கு ,,	௫
திப்பிலி ,,	௫	மிளகு ,,	௫
கடுக்காய் ,,	௫	தான்றிக்காய் ,,	௫
நெல்லிபருப்பு ,,	௫	செங்கழுநீர் ,,	௫
கோஷ்டம் ,,	௫	கூகைநீர் ,,	௫
சாதிக்காய் ,,	௫	கொத்துமல்லி ,,	௫
சர்ப்பூரசிலாசித்து	௫	தாதுசாத்திரபேதி ,,	௫
கிரந்திதகாம் ,,	௫	நல்லசந்தனம் ,,	௫
விலாமிச்சம் ,,	௫	பூமிசர்க்கரை கிழங்கு	௫

இவைகளையெல்லாம் ஒன்றாய்க்கூட்டி சூரணம்செய்துசூரணத்திற்கு நாலிலொருபங்கு பருத்திவிரைபருப்பு கலந்து இளநீர் வார்த்துப்பிசைந்து நன்றாய்ஆறினபிறகு சமனாக சர்க்கரையுங்கூட்டி நேரத்திற்குநேரம் அரைப்பணவிடை வசந்தகுசுமாகரங் கலந்து விராகனிடை சூரணம் இளநீரிலேயாவதுபசும்நெய்யிலாவது தேனிலாவது இரண்டுவேளையும் அரைமண்டலம் சாப்பிடவும் பத்தியம் சிறுகீரை பொன்னாங்கணிக்கீரை புடலங்காய்பசுவின்பால் பசுவின்நெய் சேர்த்துக்கொள்ளவும் தீரும்வியாதி இரத்தபித்தம் தேகமெல்லாம்எரிவு இரத்தபிரமியம் சுக்கிலபிரமியம் உஷ்ணம் கிரந்திகள் க்ஷயங்கள் சகலரோகமும் தீரும்.

கர்ப்பூராதிச்சூரணம்.

கர்ப்பூரம்	பலம்—உ	இலவம்பிசினி	பலம்—உ
ஏலம்	உ	லவங்கப்பட்டை	உ
கிராம்பு	உ	அதிமதுரம்	உ
சிறுநாகப்பூ	உ	சீரகம்	உ
கருஞ்சீரகம்	உ	முந்திரிப்பழம்	உ
பேரீச்சம்பழம்	உ	சடாமாஞ்சில்	உ
கடுக்காய்	உ	தான்றிக்காய்	உ
நெல்லிபருப்பு	உ	செங்கழிகோஷ்டம்	உ
கூகைநீர்	உ	மரமஞ்சள்	உ
சாதிக்காய்	உ	சாதிபத்திரி	உ
கிராம்பு	உ	கொத்துமல்லி	உ
மஞ்சள்	உ	கபச்சோளம்	உ
கர்ப்பூரசிலாசித்து	உ	சாத்திரபேதி	உ
கல்நாறு	உ	கிரந்திதகரம்	உ
ஆனைதிப்பிலி	உ	காட்டுப்பனைவேர்	உ
நெருஞ்சிவேர்	உ	செருப்புநெருஞ்சிவேர்	உ
தாமரைக்கிழங்கு	உ	நிலப்பனைக்கிழங்கு	உ
கோவைக்கிழங்கு	உ	நல்லசந்தனம்	உ
ஆவாரம்வேர்	உ	நிலாவிரைவேர்	உ
பொன்னாங்கணிவேர்	உ	கிழாநெல்லிசமூலம்	உ
தேத்தான்விரைவேர்	உ	சிந்தில்கொடி	உ
மருளிவேர்	உ	பிரமிசமூலம்	உ
மாகாளிகிழக்கு	உ		

இதுகளெல்லாம் ஒன்றாய்க்கூட்டிஇடித்து இளநீர்வார்த்துப்பிசைந்து நிழலுணர்த்தலாய் உலர்த்தி சூரணத்திற்கு சமனாக சர்க்கரைக்கலந்து இந்த சூரணம் மூன்றுவிரல் பிரமாணம் பசுவின்பாலிலாவது பசும்நெய்யிலாவது பச்சரிசிகழுவினநீரிலாவது முந்திரிப்பழத்துடனேயாவது சாப்பிடவும், தீரும் வியாதிஇருபதுவகைமேகங்களும் மூத்திரக்குளகியும்-நீரிழிவு இதுகளெல்லாம் தீரும். பத்தியம் புளி-புகையிலைநீக்கவும்.

மகாஅசுவகெந்திசூரணம்.

ஊகைபாக்ககளைசூரணம்	வி—௫	திப்பிலி	விரா—௧௫
தேவதாரம்	௫	சுக்கு	௯௨
ஏலம்	௫	அமுக்கிராக்கிழங்கு	௬௪
மிளகு	௮		

இதுகளெல்லாம் இடித்து சூரணித்து சமனுசு சர்க்கரைக் கலந்து விராகனிடை சாப்பிடவும் திரும் வியாதி பழசுரங்கள் அஸ்திசுரங்கள் தீரும்.

காமாலைவீக்கம்கஷாயசூரணம்.

சுக்கு	பலம்—௧	தானிக்காய்	பலம்—௧
மிளகு	௧	நெலவிபருப்பு	௧
திப்பிலி	௧	கொடிவேலி	௧
வாய்விளங்கம்	௧	கோரைக்கிழங்கு	௧
கடுக்காய்	௧		

இதுவெல்லாம் இடித்து சூரணம்செய்து இதுகள்கிரைக்கு சமனிடை அரைப்பொடி நிறுத்துப்போட்டு ஒன்ருய்க்கலந்து ஒருகடிபிரமாணம் தேனில் கலந்து சாப்பிடவும், காமாலை வீக்கம் தீரும், இச்சாபத்தியம்.

தாவாக்கினிச்சூரணம்.

ஓமம்	விராகனி—௧	திரிகடுகு	விராகனி—௧
பெருங்காயம்	௧	திரிகலை	௧
வாய்விளங்கம்	௧	செவ்வியம்	௧
பஞ்சலவணம்	௧	திப்பிலிமூலம்	௧
அத்திக்திப்பிலி	௧	கோரைக்கிழங்கு	௧
கடுகுரோகணி	௧	சீரகம்	௧
கருஞ்சீரகம்	௧	கோஷ்டம்	௧
கண்டங்கத்திரி	௧	வெப்பாலைஅரிசி	௧
சிறுவழுதிலைவேர்	௧	சிவனைவேர்	௧

ஈசுரமூலிவேர்	விராகனி.	க	பொன்முசுட்டைவேர்		க
சிறுதேக்கு	...	க	சத்திச்சாரம்	...	க
வெவச்சரம்	...	க	வசம்பு	...	க
மஞ்சள்	...	க	மரமஞ்சள்	...	க

இதுகளெல்லாம் ஒன்றாய்க்கூட்டி யிடித்து சூரணம் செய்து யிதிலகண்டில் பாதி சாக்கரை கலந்து அந்திசந்திஇரண்டு வேளையும வெந்நீரில் கொள்ளசீதவாதம் குன்மம் பழையமலப்பாண்டு மந்தாக்கினி காசம்சுவாசம் அருசி வாந்தி அசிரணவகை முதலானசர்வவியாதியும்தீரும் இதற்குபாக்களவு தேர்வாளம் இதற்கு அஞ்சுக சிடை இலைக்கள்ளிவேரும் கலந்துகொள்ள நல்லது ஒருகடிகை மூன்றுகுளிகை காலை மருந்துக்கும் ஒருகுளிகை அந்திமருந்துக்குமிடலாம சர்க்கரையிலலாவிட்டாலும நல்லது அனுபானம சூரணமுமேகொள்ளலாம் உண்டைகட்டினுல் தேனிலிடலாம் வியதி குணமறிந்து கொடுக்கவும்.

விளங்காதிச் சூரணம்.

வாய்விளங்கம் திப்பிலிமூலம் இலவுங்கம்லவுங்கப்பட்டைஇது ஒவ்வொன்று ஒருபங்கு சுக்கு திப்பிலி மிளகு ஒவ்வொன்றநாலுபங்கு சேர்த்துக்கூட்டி சூரணம்செய்து சூரணத்துக்குசர்க்கரைகலந்து காலமேகழஞ்சிகொள்ள காலேசுவாசம் இருமல் க்ஷயம் தீரும்தீபனமுண்டாம் இதற்குகாச்சல்மேலுடம்பு வீளை இருமலாலே சுவாசமானல சர்க்கரை நீக்கி சூரணம்கொள்ளவும்.

வேறுஇஞ்சிச்சூரணம்.

இஞ்சி	பலம்	க	கோஷ்டம்	அரைக்கால்
சர்க்கரை	,,	உ	கொத்துமல்லி	அரைக்கால்
திப்பிலி	,,	உ	சிறுநாகப்பூ	வீசம்
மிளகு	,,	உ	வாய்விலங்கம்	வீசம்
சீரகம்	,,	வ	அதிமதுரம்	வீசம்
கிராம்பு	,,	உ	விலாமிச்சம்வேர்	வீசம்
ஜாதிக்காய்	,,	உ	லவுங்கப்பத்திரி	வீசம்
ஏலம்	,,	வ	பசுவின்நெய்	உ

இவைகளையெல்லாம் சூரணமசெய்து வஸ்திரகாயம செய்
துக்கொண்டு இஞ்சியைவட்டமாக அறுத்துபசுவின் நெய்யிலே
வறுத்து சரக்குகளுடன் சேர்த்துக்கலந்து சர்க்கரையுடன் ஒரு
கடிப்பிரமாணம் நெய்யில்சாப்பிடவும் (திரும்வியாதி) இருமல்சு
வாசம் ஈளை காசம் இவைகள்தீரும்.

கட்டுசூலைக்குகுக்குடாதிச் சூரணம்.

சுக்கு	விராகனிடை	௫	சிறுதேக்கு	விராகனிடை	௫
திப்பிலி	,,	௫	வாய்விளங்கம்	,,	௫
மிளகு	,,	௫	சித்தரத்தை	,,	௫
சித்திரமூலம்	,,	௫	கடுகுரோகணி	,,	௫
திப்பிலிமூலம்	,,	௫	பாக்கிப்பட்டை	,,	௫

இவைகளைசூரணம்செய்து நல்லெண்ணெய்விட்டுக் கொழ
ப்பி கருங்கோழி ஜதைகோழிக் குடல்வாங்கிப்போட்டு இந்தம
ருந்தை கோழிவயற்றில்வைத்து தைத்துவாதநொச்சிச்சார் படி
உ மிளகு தக்காளிச்சார்படி உ கையாந்தகரைச்சார் படி உ சங்க
லச்சார் படி அரை நல்லெண்ணெய் படி அரை இதுகளையெல்லா
ம் அடுப்பிலவைத்து காய்கிறபோது அந்தமருந்தில் கோழியை
க்கூடப்போட்டு லேக்கியபக்குவத்தில் யிறக்கி கோழிஎலும்பை
யெடுத்துப்போட்டு நிழலுணர்த்தலாய் உலர்த்திசூரணம்செய்து
இரண்டுவேளையும் இரண்டுவிராகனிடை தேனில்சாப்பிடவும் இ
தற்குபத்தியம் பசுவின்பால கோழிக்கறி புளிகடுகு நல்லெண்
ணெய் இவை ஆகாது இந்த ஔஷதம் ஒருமண்டலம் சாப்பிடவு
ம் கட்டுஞ்சூலைசள தீரும்.

பூபதிச்சூரணம்.

கீழாநெல்லிவேர்	பலம் க	மிளகு	விராகநிடை உ
திப்பிலி	விராகநிடை உ	மாதளை ஓடு	... உ
ஜாதிக்காய்	... உ	இலவம்பிசினி	... க
மாங்கொட்டை	... உ	சீரகம்	... க
பெருமரப்பட்டை	... ச	வெந்தயம்	... க
சமுத்திரப்பழம்	... க	நீர்முள்ளி விரை	... க
கிராம்பு	... க	ஜோகிவிரை	... க
அரத்தை	... க	அதிவடையம்	... க
வலம்புரிக்காய்	... க	சுக்கு	... க
சதகுப்பை	... க	குருசானி ஓமம்	... க
வாய்விளங்கம்	... க	அபினி	... க
புளியங்கொட்டை ஓடு	... ரு	நெல்லிபருப்பு	... ந

இவைகளை யிளவருப்பாக வருத்து சூரணம் செய்து ஒரு கடிப்பிரமாணம் தேனிலாவது வெந்நீரிலாவது சாப்பிட கிராணி, பித்தக்கிராணி, அதிசாரம், சூலை, பெருமல், இரைச்சல், வயற்கருப்பு இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

இருமல்தீர இண்டாதிசூரணம்.

இண்டவேர்பட்டை, கண்டங்கத்திரிவேர், சுளாவிரை வேர், சிறுதேக்கு சமனாக்கூட்டி சூரணம் செய்து தேனில் கொள்ள இருமல் தீரும்.

அதிசாரக்கிராணிகள் தீர,தாடினச்சூரணம்.

மாதளங்காய்	மாங்கொட்டை பருப்பு
வில்வக்காய்	ஆத்திப்பூ
கிராம்பு	பெருங்காயம்
சாதிக்காய்	ஏலம்
புளியம்பழம் ஓடு	பெருமரத்துப்பட்டை
விளாம்பிசினி	பொன்முசுட்டைவேர்
அபினிமருந்து	கரிவேப்பிலையீர்க்கு
இந்துப்பு	வாய்விளங்கம்

வெந்தயம்	அதிவிடையம்
சாதிபத்திரி	களர்ச்சிபருப்பு
சீரகம்	சடைக்கஞ்சாவிரை
சுக்கு	கருஞ்சீரகம்
வெப்பாலை அரிசி	மிளகு

இதுகளை வகை ஒன்றுக்கு விராகனிடை அரைபாகம் சேர்த்து யிளவருப்பாய் வறுத்து பொடிசெய்து வடிகட்டிக்கொண்டு பதனம்பண்ணவும் இந்தச் சூரணம் எருமைத்தயிரிலேயாவது நெய்யிலேயாவது வெந்நீரிலே சாப்பிடவும் பத்தியம் லக்கிரி கோழி மாங்கிஷமாகாது பண்டிமாங்கிஷம் ஆகும்.

சந்தனாதிச் சூரணம்.

சந்தனம்	அதிமதுரம்
கோரைக்கிழங்கு	முந்திரிப்பழம்
சன்னநாகசுரம்	கோஷ்டம்
இலுப்பப்பூ	செங்கழுணிநீர்கிழங்கு
விலாமிச்சம்	கோரோசனம்
நெல்லிபருப்பு	பேரீச்சம்பழம்

இதுகளைச் சமனாகச்சேர்த்து சூரணம் செய்துக்கொண்டு பங்காளச் சர்க்கரைச் சமனாகக்கூட்டிக் கலந்து காலமே ஒரு கடிப்பிரமாணம் கொள்ளவும், இதில் தீரும் வியாதி:—கை, கால், உடம்பு யெரிச்சல், பிரமேகம், பயித்தியம் அதிக வுஷ்ணம் தீரும்.

ஏலம்னாதிச்சூரணம்.

ஏலம்	தாமரைப்பூவிற்குள் இருக்கும் அரும்பு
நற்சீரகம்	அகிலக்கிழங்கு
அதிமதுரம்	சடாமாஞ்சில்
திப்பிலி	சந்தனம்
கோரைக்கிழங்கு	

நிலவேம்பு	லவங்கப்பட்டை
நற்பாலைவேர்பட்டை	நெரிஞ்சிக்காய்
கோஷ்டம்	நாகப்பூ
பிருவேர்	இலுப்பைப்பூ
இலவங்கம்	சீந்திசர்க்கரை
நெரிஞ்சிவேர்	சுக்கு
இலவம் பிசினி	அமுக்குருவேர்
நல்லேலம்	கொத்துமல்லிகை
முரிப்பழம்	காட்டெருமைமூத்திரம்
நன்னுரிவேர்	லர்மிச்சம்வேர்
நீர் வள்ளிக்கிழங்கு	கஸ்தூரிமஞ்சள்
சாதிபத்திரி	சாதிக்காய்
	பூனைக்காலிபருப்பு

இவை ஒவ்வொன்றும் சமனிடையாகக்கூட்டி சூரணம் செய்து வடி கட்டிக்கொண்டு காலமே தேனிலாவது வெண்ணெயிலாவது கொள்ளவும். தீரும் வியாதி.— வயிற்றெரிச்சல், உடம்பெரிச்சல் இவைகள் தீரும். வீரியவிர்த்தி உண்டாகும்.

காய்ச்சல் கிராணிக்கு மாதளச்சூரணம்.

மாதளவோடு	அதிவிடையம்
வில்வம்	முத்தக்காசு
பெருமரப்பட்டை	பொன்முசுட்டைவேர்
லவங்கப்பட்டை	சாதிபத்திரி
புளியம்பழம் தோல்	திரிகடுகு
சாதிக்காய்	சாத்திரபேதி
சதைக்கிராம்பு	கட்டிமாங்கொட்டை

இவைகளைச்சமனுகக்கூட்டி சிவக்கவறுத்து பொடி செய்துக்கொண்டு காசிடை தேனில் கொள்ளவும், தீரும்வியாதி:— காய்ச்சல், கழிச்சல், கிராணி, முருக்கு இவைகள் தீரும், காய்ச்ச லில்லாதிருந்தால் மற்ற அதிசாரத்துக்கு தயிரி லிடவும், பத்தியம் தயிர்சாதம் சாப்பிடவும்.

மூலத்துக்கு சூரணம்.

கடுக்காய்பொடி விராகநி	ரு	கருணைக்கிழங்கு விராகநி	அ
சீரகம் ...	அரை	அவச்சாரம் ...	உ
திப்பிலி ...	க	சேங்கொட்டை ...	அ
அத்தித்திப்பிலி ...	உ	கோர்வாளம் ...	க
செவ்வியம் ...	ரூ	சிவதைவேர் ...	அ
சித்திரமூலம் ...	உ		

இவைகளை கூட்டி சூரணம் செய்து இந்த சூரணத்திடைக்கு நாட்டுச்சர்க்கரைக்கலந்து பிறகு ஒரு கொட்டைப்பாக்கு பிரமாணமெடுத்து மோரில் போட்டுக் குழம்பாய்க் குழைப்பி சாப்பிடவும் அசாத்திய மூலம் தீரும் ஒருமாதம் இருபதுநாள் கொள்ளவும்,

இஞ்சிச்சூரணம்.

இஞ்சி	கொடிவேலிப்பட்டை
வசம்பு	இந்துப்பு
கடுக்காய்	சீரகம்
பெருங்காயம்	கோஷ்டம்
சுக்கு	

இந்தப்படியே வகை யொன்றுக்கு விராகநிடையாகச்சேர்த்து சூரணம்செய்துக்கொண்டு காலமே வெந்நீரில் கொள்ளவும், தீரும் வியாதி.—வாந்தி, அரோசிகம், நீர்ப்பாண்டு, குன்மம் தீரும்.

பரங்கிப்பட்டைசூரணம்.

பரங்கிப்பட்டை சூரணம் செய்து அந்த நிரைக்கு மிளகு திப்பிலிமூலம், தாம்பரபர்மம், சுக்கு, இஞ்சிச்சரி சூரணம் பன்னிரண்டு சூரணம் கலந்து காலமே தேனில் கொள்ளவும் அந்திக்கு பசுவின்நெய்யில் கொள்ளவும் தீரும்வியாதி, சூலைக் கடுப்பு, இடுப்பு கடுப்புவலி யிவைகள் தீரும்.

சூரணவகைப்படலம்

முற்றிற்று.

புடம்போடும் வகைப்படலம்

காடை புடம்	விராட்டி	உ
கவுதாரி புடம்	,,	ரு
குக்கிடம்	,,	ய
ஏனம் வைராகம்	,,	ருய
கெல புடம்	,,	ாா
கனப்புடம்	,,	ஆயிரம்.

எரிப்பு.

தீபம்	விரகு	க
கமலம்	விரகு	உ
கடாக்கினி		சஎரு

விரகு ஒரு சாண் நீளம் இரண்டு விரல் கனதியாயிருக்க வேண்டும்.

புடம்போடும் வகைப்படலம்

முற்றிற்று.

தனவந்திரி அனுபோகம்.

மூன்றுவது

செந்தூர வகைப்படலம்.

அயக்காந்தச் செந்தூரம்.

அயப்பொடி பலம்	உ	ஊசிக்காந்தம் பலம்	உ

இவை இரண்டையும் கல்வத்தில் போட்டு பொத்தலை கையாந்தகரைச் சாறுவிட்டு ஆட்டி ரவியில் வைத்து அரை கெசம் புடம்போடவும் இப்படி யேழுதரம் போட்டால் செந்தூரமாகும் அதை யெடுத்து சிமிளில் அடைத்துக்கொள்ளவும் (தீரும் வியாதிகள்.) நீராம்பல், நீர்க்கோர்வை, நீரேரும் சோகை, பாண்டு இவைகளுக்கு தேனில் கொடுத்தால் தீரும் வாய்வினல் அடுத்த வியாதிகள் தீரும் (பத்தியம்) உப்பு கூட்டிக்கொள்ளவும்; கால் மண்டலம் அல்லது ஒரு மண்டலம் சாப்பிட வியாதி தீரும்.

அயச்செந்தூரம்.

அயப்பொடியை எலுமிச்சம் சாற்றில் ஊரப்போட்டு நரளைச்சாற்றில் அரைத்து மூன்று புடம்போட செந்தூரமாகும்.

அரப்பொடி பலம் உ ஐந்து யெலுமிச்சம்பழச்சாற்றில் ஊரவைத்து ஒரு ஓட்டில் போட்டு மாவிலிங்கம் இலை அரைத்து இரண்டு கொட்டைபாக்களவு கலந்து ரவியில்வைக்கவும் காய்ந்த பிறகு யெடுத்து கல்வத்தில் போட்டு தூள் செய்து வைத்துக்கொண்டு,

மிளகுபலம் க, வருத்து வடிகட்டி நெய்பலம் க, சர்க்கரை பலம் க, லேகியமாய் செய்துக்கொண்டு ஒண்ணேகால் விராக

நிடை செந்தூரத்தைச்சேர்த்து வேளை ஒன்றுக்கு கால்விராக னிடை ஒருநாளைக்கு ஏழுவேளை கொடுக்கவும் பாண்டுவகை சோகை யெல்லாந்தீரும்.

அரிதாரச்செந்தூரம்.

ரசம்	விராகநிடை	க	அரிதாரம்	விராகநிடை	க
கெந்தகம்	...	க	மனோசிலை	...	க

தாம்பரம் விராகனிடை கடு யெடுத்து யீச விரகுபோல தட்டி முரித்து பொடிசெய்துக்கொண்டு இம்மருந்துடன் செப்புப்பொடியும் கூட்டி யெருக்கம்பால் விட்டுப்பிசரி புது கலசத்திலிட்டு சீலைமண்செய்து ஒருசாமம் புடம்போட செந்தூரமாகும்.

சுக்கு	விராகநிடை	க	திப்பிலி	விராகநிடை.	க
மிளகு	...	க			

இவகளை பொடிசெய்து மேல்படி செந்தூரத்துடன் கலந்து இரண்டு பணவிடையெடுத்து தேன் சர்க்கரை வெல்லம் இஞ்சிச்சார் இதுகளில் ஏதாகிலும் ஒன்றில் கொடுக்கலாம்.

காடிகாரச்செந்தூரம்.

காடிகாரம்	விராகநிடை	க	சாதிலிங்கம்	விராகநிடை	௨

இரண்டையும் சேர்த்து அரைத்துக்கொண்டு பணவிடை அல்லது அரைப்பணவிடை சர்க்கரையிலாவது தேனிலாவது கொடுக்கவும் தீரும்வியாதி.—சுரம், சன்னிவாய்வுக்கு சுக்குத் தூளாவது பனவெல்லத்திலாவது கொடுக்கவும், உதிரச்சிக் கல் விரைவாதம், அண்டவாதம், வாதசன்னி, சிலேத்துமம் சுரத்துக்கு துளசியிலையில் கொடுக்கவும். பத்தியம் மாமிஷாதிகள் சேர்க்கக்கூடாது.

லோகச்செந்தூரம்.

அரப்பொடி கொண்டுவந்து நன்றாகக்கழுவி எலுமிச்சம் பழம் சாற்றில் இரண்டு சாமம் ஊரவைத்து கழுவி குழிக்கல் லில் போட்டு நெல்லிக்காய் சாறுவிட்டு அரைத்து ஏழுபுடம் போடச்செந்தூரமாம். இரண்டு பணவிடை பனவெல்லத்தில் கொள்ளவும். சோகை, காமாலை தீரும் கடும்பத்தியம்.

தாளகச் செந்தூரம்.

தாளகம் வேணது கொண்டுவந்து அடுப்புக்கூட்டி புதுச் சட்டியைக்காயவைத்து தட்டிலே தாளகத்தைப்போட்டு முள் ளு முருங்கக் கழியைக் கொண்டுவந்து ஒரு முழக் கழி கருக்கி அந்தக் கழியிலே கடைந்து பார்க்கச் செந்தூரமாகும். அதை யெடுத்து சிமிளில் வைத்துக்கொள்ளவும் மேகத்தோடுகூடின வியாதிகளுக்கெல்லா மாகும் வெட்டைக்கு இளநீரில் பணவி டை செந்தூரம் கொடுக்கவும் பிரமியத்துக்கு சீனிசர்க்கரையி லாவது பசுவின் னெய்யிலாவது கொடுக்கவும் ரத்தபித்தத்து க்கு வில்வயிலை கியாழத்தில் பணவிடை கொடுக்கவும்.

ரசச் செந்தூரம்.

ரசம்	விராகனிடை	௨	கெந்தகம்	விராகனிடை	௨
மனோசிலை	...	௨			

முருங்கயிலைச் சார்விட்டரைத்து வழித்து குகைசெய்து அந்த குகைக்குள்ளே முன்னரைத்துகட்டி வழித்ததை வைத் து சீலையிலே பொட்டளம்கட்டி சட்டியில் மணல் பாதிகொட் டி அதற்குள்ளே வைத்து மேலே மணல் கொட்டி அடுப்பில் வைத்து மூன்றுசாமம் எரிக்க சட்டிமேல் கைவைத்துப் பார்த் தால் மணல் சுட்டதின்பிறகு எடுத்தால் செந்தூரமாகும்.

சண்டமாருதச்செந்தூரம்.

கெந்தகம்	விராகநி	க	லிங்கம்	விராகநி	அ
ரசச்செந்தூரம்	,,	க	வீரம்	,,	க
பூரம்	,,	௪	சக்கரை	,,	க

இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு இருசாமம்அரைக்க வர்ணம் பவழநிறமாகும் இந்தச்செந்தூரத்தை குடுக்கையில் அடைத்துவைத்துக்கொண்டு பணவிடைசெந்தூரம்பேயன வாழைப்பழத்தில் நடுவில்வைத்து விழுங்கிவிடவும் இதில் திரும் வியாதி சன்னிபதிமூன்றும் அதிசாரபேதி பவுத்திரம் வாதங்கள் சூலை, பாரிசவாய்வு, பாண்டு, விரைவாதம், முகவூதல, காமாலை சோகை, புத்து. அலறுசன்னி, அண்டவாதம், பதினெட்டு குஷ்டம், நாகப்பாம்புகடி, பூரான்கடி, குன்மங்கள், காக்கைவலி சூசிகவாய்வு அசதி, கனுவாதம், புண், கிரந்தி, வெடிசூலை, பசியமம் ருலையெரிவு, பக்கவலி, மகோதிரம், மண்டைகுத்தல், குதிரைவலி, குமாகண்டவலி, கண்டமாலை, நாய்கடி, எலிகடி, வல்லிவிப்புருதி, பெருஜெரம் பித்தம். துடைவாழை, கறப்பான், மதுமேகம், இவைகள்யாவுந்தீரும் கடும்பததியம் மறுபத்தியத்தில் மிளகு சிறுகீறை செருப்புநெரிஞ்சிஅருகன்கட்டை நீலம் இவைஐந்தும் நிதானமாகப்போட்டு தீயவருத்து தண்ணீர் விட்டுக்காச்சி ஐந்துநாள் மறுபத்தியத்தில் இருவேளையும்அரை ஆழாக்கு பிரமாணம் குடித்து வந்தபின்பு இரண்டுநாள் கியாழமிட்டு ஓமம்தேய்த்து ஸ்கானம் பண்ணவும் ஒருவாரத்துக்குப் பின் எண்ணெய்ஸ்தானம்.

அயக்காந்தச் செந்தூரம்,

பலகைகாந்தம்	விராகநி	௰	இரசம்	விராகநி	௰
அரைப்பொடி	,,	௰	கெந்தி	,,	உ௰

இவைகளை கற்றாழைச்சாறுவிட்டு ஆறுசாமம் அரைத்து சின்னபில்லைபாய்பண்ணி உலரவைத்து சட்டியில் கடாக்கினியா

ய் ஆறுசாமம் எரித்து ஆறவிட்டு எடுத்து அதைமறுபடியும்க ல்வத்திலிட்டு கத்தாழைச்சாறு வேண்டியதை கல்வத்தில் போட்டு இரண்டுசாமம் அரைத்து சின்னபில்லைசெய்து ஓட்டில்வைத்து 10 - யெருவில் புடம்போட்டு எடுத்து சுத்திபண்ணின லிங்கம் பலம் க சேர்த்து கல்வத்தில்றுணிக்கி செந்தூரத்தைவைத்துக்கொண்டு வேண்டிய வியாதிகளுக்கு கொடுக்கவும் அரைப்பொடி பழச்சாற்றில் சுத்திசெய்யவும்

கல்லுப் செந்தூரம்.

கல்லுப்பைக்கொண்டுவந்து குளிமிட்டான்இலையையுங்குப்பமேனியிலையையும் கொண்டுவந்து ரசம்பிழிந்துவிட்டுஅரைத்து பில்லைதட்டி காயவைத்து முழப்புடம் போடவும் இப்படி ஏழுபுடம்போடவும் செந்தூரமாகும்.

உப்பு செந்தூரம்.

கல்லுப்பு படி வ ஆடுதின்னாப்பாளை சாறுபடி உ உப்புஅமுக்குபோக கொஞ்சம் தண்ணீரில் அலசிப்போட்டு வெய்யலில் காயவைத்து அதின்பின்பு உரலில்போட்டு இடித்து சட்டியில் போட்டு அடுப்பிலேற்றி ஷை சாற்றை அதில்கொஞ்சம் கொஞ்சமாய்விட்டு மறஅகப்பையினல் திராவிக்கொடுக்க கொடுக்க அதுகருப்பாய்போகும் அதையெடுத்து கல்வத்தில்போட்டு ஆடுதின்னாப்பாளை சாறுவிட்டு அரைத்து ச பில்லைதட்டி வெய்யலில்காயவைத்து அதின்பின் சீலைமண்செய்து அ விரட்டியில் புடம்போடவும் செந்தூரமாகுமட்டும் திருப்பதிருப்பப் புடம்போடவும் எட்டாவது அல்லது கடசிபுடத்துக்கு மருந்தைஅரையணைபைசா அளவு பெரியதாய்செய்துகாயவைத்து தீ அதிகமாய் போடாமல் இரண்டுமூன்று விரட்டியில் புடம் போடவும்தீரும்வியாதி இருமல் சுவாசகாசம் க்ஷயம் குன்மம் வயற்றுவலிமயக்கம் சூதகவலி முதலானதுக்கு கொடுக்கவும்.

காந்தச்செந்தூரம்.

ஊசிகாந்தத்தை எலுமிச்சம்பழச்சாறு அரைத்துகாயவைத்து கெஜப்புடம்போட செந்தூரமாகும் எருமைப்பால் அரைசேர் காய்ச்சி ஆடையெடுக்காமல் காந்த செந்தூரம் போட்டுகொடுத்து பத்தியமாய் யிருக்கவேண்டும் மூனுநாள் நீர் சுருக்குத்திரும்.

செந்தூர வகைப்படலம்

முற்றிற்று.

இராஜரிஷி அனுபோக

நான்காவது

பற்பவகைப்படலம்.

இரசபற்பம்.

இரசம் விராகனிடை இரண்டுவாங்கி மஞ்சள் பொடிசெய்து இரன்டுநாழிகை அரைத்து ஊதிப்போட்டு பனமட்டையை வாட்டி பிழிந்து மூன்றுசாமம்அரைத்து வில்லைதட்டிவெய்யலில் சாயவைத்து ஓட்டில்வைத்து ஒடுமூடி மூன்று சீலைமண் செய்து கோழிபுடம்போட பற்பமாம் இந்த பற்பம் மேகம் உடைக்கும் அனுபானம் வெல்லத்தில் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

அண்டபற்பம்.

மூன்றுமுட்டை லிங்கம் ஈயச்செந்தூரவகை க க்கு ௫ மூன்று பங்காக்கி மூன்றுமுட்டைக்குள்போட்டு சிறுகீரையரைத்து கவசம்பண்ணி அதின்மேல் சீலைமண்செய்து சாயவைத்து ம விரட்டிகீழே மேலே ௫ விரட்டி புடம்போட்டு யெடுக்கவும் அனுபானம் சுக்கு மிளகு திப்பிலித்தாளில் கற்கண்டு அல்லதுசர்க்கரை பலம் 2 லேகியமாய்கிளரி சிறுநெல்லிக்காயகளர்ச்சிக்காயளவுக்குள் வைத்து கூ வேளை சாப்பிடவும்.

அரிதாரபற்பம்.

அரிதாரம் பலம் க சுண்ணாம்பில் எ தரம் சுத்தி செய்து வெள்ளை நத்தை யோடு சேர்த்து தூள் பண்ணி விந்தினால் அ

ரைத்து பில்லைசெய்து ௰ எருவில் ஒருமுழுப்புடம் போடவும் தீரும்வியாதி ஈளை காசம் நாய்கடி சுக்கில்வைத்து கொடுக்கவும்.

தாளகபற்பம்.

தாளகம் பலம் வ சுக்கான் சுண்ணாம்பில் சுத்திசெய்து செம்பருத்தியிலைச் சாறுவிட்டு சாமம் அரைத்து பில்லை தட்டி காயவைத்து பூவரசம்பட்டையை சுட்டு கருகலாயிருக்கும்போது ஒருகலசத்தில் அரைப்படி சாம்பல் போட்டு அதன்மேல்பில்லையைவைத்துநன்றாய்அப்பி வில்லைபோட்டுமூடிகாயவைத்து ஆறுவிரட்டியில் புடம்போடவும் கம்பத்தியம்.

தீரும்வியாதி இருமல் சயம் சுவாசகாசம் மந்தாரகாசம் இவைகள் தீரும்.

தாளகபற்பம்.

பனிநீர்படி ௧ குடியோடிப்பூண்டு சாறுபடி ௧ இரண்டையுங்கலந்து ஒருபுதுப்பானையில் ஊற்றி ௧ பலம் தாளகத்தை ஒரேகட்டியாய் வாங்கி நூலினால் கட்டி சாற்றுக்குள் பானை அடியில் தட்டாதபடி மருந்தை மத்தியில் தொங்கவிட்டு தென்ன மட்டை விறகால் எரித்து சாறுசுண்டின பிறகு தாளகத்தையெடுத்து பீங்கிடாரி சாணிக்குள்வைத்து மூன்றுசீலை மண்செய்து ௮ எருவில் அரையே அரிக்கால் முழம் புடம்போட பற்பமாம்.

தீரும்வியாதி சுரத்துக்கு ஒருஅரிசிஎடை ஒரேவிசைகொடுக்கவும் நாள்பட்ட சுரங்களெல்லாம் தீரும் வயற்றுவலிக்கும் கொடுக்கலாம் இச்சாபத்தியம்.

கெந்தகபற்பம்

புளி நருளையிலையை மாங்காய்திட்டம் அரைத்து நெல்லிக்காய் கெந்தகத்தை அதற்குள்ளாகப் பொதிந்து சீலைமண்செய்து முழுப்புடம்போட சகலமேகத்துக்கும் நெய்யில் கொடுக்கவும்.

தாம்பரபற்பம்.

நீர்மேல் பச்சிலையும் வாளமுஞ் சேர்த்தரைத்து சல்லிக்கவசங்கட்டி முப்பது விராட்டியில் புடம்போடபற்பமாகும்.

வங்கபற்பம்.

சுக்கான்கல்லை முரிக்கிலைச் சார்விட்டு ஒருதேங்காயளவு அரைத்து அதற்குள்ளாக வங்கத்தைவைத்து நன்றாய் காயவைத்து அதின்மேலே கருப்பூர சிறுட்டத்தை தேன்விட்டரைத்துபூசிக் காயவைத்து கெஜப்புடம்போட பற்பமாம்

துருசுபற்பம்.

துருசுகட்டிக்கு அம்மாம்பச்சரிசியிலை பதினைந்துநாள்கவசஞ்செய்து காயவைத்துப் புடம்போட பற்பமாம.

தங்கபற்பம்.

ஆகாயத்தாமரை அரைத்து தேங்காய் பிரமாணம் உண்டைசெய்து தங்கதகட்டை யதனுள்வைத்து காட்டெரு இருபதில் புடமிடவும்.

நிலஆவாரைபற்பம்.

நிலாவரைச்சமூலம் கொண்டுவந்து நிழலிலுலர்த்திப்பொடிசெய்து சுரக்குடுகையி லடைத்துக் கொள்ளவும் இப்பொ

டிசாப்பிடும் விதம். மூவிரல்கொண்ட சூரணம் தேனில் கொள்ள உடம்பு பெருகும் விளக்கெண்ணெயில் கொள்ள எலிகடிதீரும் வெண்ணெயில் கொள்ள கிரிபூச்சிவிழும் மோரில் கொள்ள விஷம்தீரும் பசுவின்கோமயத்தில் கொள்ள சிறங்குதீரும் ஆட்டுக்கோமயத்தில் கொள்ள குஷ்டம்தீரும் கருத்த ஆட்டுப்பாலில்கொள்ள குழந்தைகளின் செவ்வாப்புதீரும் எருமைச் சாணிப்பாலில் கொள்ள பாண்டுதீரும் வ்ருக்தி சாற்றில்கொள்ள செய்யான்கடி தீரும் எருமைப்பாலில் கொள்ள காணாக்கடிதீரும் வேப்பன்சாற்றில்கொள்ள செவ்வட்டை கடிதீரும வேலம்பட்டைச்சாற்றில் கொள்ள பல்லுக்கொடைச்சல் தீரும் இப்படி அரைமண்டலம் ஒருமண்டலம சாப்பிட வியாதி தீரும் பத்தியமில்லை இச்சாபத்தியம்.

காரீயபற்பம்.

காரீயத்தை உருக்கி இலுப்பெண்ணெயில் பத்துவிராகனிடை சாய்த்து யெடுத்துக்கொண்டு கருஞ்சாற்றில் அரைத்து குகைபண்ணி அதில் முன் காரீயத்தை வைத்து மேல்குகைமூடிச் சீலைமண்செய்து ஒருமுழப்புடத்தில் போடவும் பற்பமாம் சகலநீரிழிவும் நீர்ச்சுருக்கும் இதுகளுக்குப் பசுவின்னெய்யில் கொடுக்க குணமாம் இச்சாபத்தியம்.

பவழபற்பம்

பவழம்கொண்டுவந்து ஒருகலசத்தில் கூமறிச்சோறு பறப்பி அதற்கு மேலும் சோறுபறப்பி மேலும் பவழம்பறப்பி மேலே சீலைமண்செய்து கெசப்புடம்போடவும்.

கலன்கொம்புபற்பம்

கலன்கொம்பு வேணதுஎடுத்து தீயில்போட்டு எரித்து தட்டிக் கலுவத்திலிட்டு எலுமிச்சம் பழம் சார்விட்டரைத்

து ஓடுவட்டமாகத்தட்டி பில்லைபண்ணி ஓட்டிலவைத்து மேலோடுபோட்டு மூடி சிலைமண்செய்து கோழிப்புடம்போட பற்பமாகும் மேகத்துக்கு கொடுக்கலாம்.

குமரிபற்பம்.

அறப்பொடி விராகனி	௨௰௩	காந்தம் கழஞ்சி விராகனி	௩
கெந்தகம் ...	௰௨	ரசம் கழஞ்சு ...	௫

இதைகத்தாழஞ்சார்விட்டு நன்றாக அரைத்து அதைகலசத்திலிட்டு அடைபோல் ஒருஎருமுட்டை யகலத்தில் தட்டி மேலும் ஒருகலசங்கொண்டு மூடி வெய்யலுக்கெதிராக ஒருசாமமிருக்கவைத்து எடுக்க பற்பமாகவிருக்கும் அத்துடனே திரிகடுகு திரிபாலை சிரசம் கருஞ்சீரகம் இந்துப்பு விழாவரிசி இதுவொவ்வொன்று ஒருகாசிடை கூட்டி நன்றாய் சூரணம்பண்ணி முந்தினபற்பத்துடனே கலந்து வைத்துக்கொள்ளவும் இதில் திரும்வியாதி சகலகுன்மத்திற்கும் இடப்பட்ட கிஷாயத்திலாவது ஒருகாசிடை பற்பம் இடசகலகுன்மம் கிருணி வயறு பொருமல்அக்கினி மந்தம் இதுகள்தீரும் இச்சாபத்தியம்

சீமைகல்னார்பற்பம்

சீமைக்கல்னார் கொண்டுவந்து அகத்திக்கீரைச் சாற்றில் மூன்றுநாள் ஊரப்போட்டு பின்பு எடுத்து அந்தரசத்தில் அரைத்துபில்லையாகத்கட்டிக் காயவைத்து அகலில்வைத்து சிலைசெய்து முழுப்புடம் போடவும்.

நாட்டுக்கல்னார்பற்பம்.

நாட்டுக்கல்னார் கொண்டுவந்து பழச்சாற்றில் மூன்று நாள் ஊரவைத்து குடுவையில் அல்லது ஓட்டில் வைத்து

கொஞ்சம் சார்விட்டு மேலே சீலைமண்செய்து முழுப்புடம் போடம்.

அரிதாரபற்பம்,

பொன் அரிதாரம் பலம் ஒன்று கொண்டுவந்து பிரம்மதண்டி பாலில தடவி வைக்கவும் இப்படியே பத்து தினம் தடவி காயவைத்து பின்பு புளியன்கிராணி கொண்டுவந்து கொளுத்தி இரண்டுபடி சாம்பலெடுத்து ஒரு குடுவையில் ஒருபடி சாம்பலை அடியில்போட்டு அதின்மீதில் கட்டியைவைத்து அதன்மேல் ஒருபடி சாம்பலை போட்டு அடுப்பின் மீதில்வைத்து நாலு ஜாமம் எரிக்கவும் பற்பமாகும்.

பொட்டிலுப்புபற்பம்.

பொட்டிலுப்புக் கொண்டுவந்து ஒருகுடுவையில் பூவரசன் பழுப்பு ஐம்பது அடியில் போட்டுஅதற்குமேல் உப்பு கட்டிவைத்து அதன்மேல் ஐம்பது பழுப்புபோட்டு அடுப்பில் வைத்து இலை கருக புகை அடங்கின பிற்பாடு எடுக்கவும்.

கல்லுப்புபற்பம்.

குளிவிட்டான் இலையைக்கொண்டுவந்து ரசம்பிழிந்து கல்லுப்பை கல்வத்திலிட்டு இரண்டுஜாமம் அரைத்து அன்பது எருவில் புடம் போடவும்

வெள்ளைபாஷாணபற்பம்.

வெள்ளை பாஷாணம் கொண்டுவந்து அகல செங்கல்லில் பள்ளம் தோன்றி அதில் வைத்து செப்புக்கிண்ணம் கொண்டு அதின்மேல் மூடி சந்துவாய்க்கி சாம்பிராணி போட்டு உருகிப்பிடித்துக்கொண்ட பிறகு அடுப்பின்மேல் வைத்து வெள்ளாட்டுக கோமயத்தை கிண்ணத்தின்பேரில்

விட்டுக்கொண்டே இருக்கவும் இப்படி நாலு ஜாமம் சுருக்குக்கொடுக்கவும்.

பூரபற்பம்.

பூரம்	பலம் ... க	படிகாரம்	பலம் ... உ

படிகாரத்தை சட்டியிலிட்டு அடுப்பேற்றி தீபாக்கினியாக எரிக்கையில் படிகாரம் உருகிவரும் உருகின சமயம் பார்த்து பூரத்தை அதினடுவில் சொருகி எரித்துக்கொண்டிருக்க படிகாரம் நன்ருய் பூர்த்தபின் எடுத்து யொடித்து சீசாவில் வைத்துக்கொண்டு யிளநீரில் உ-அரிசிஇடைபோட்டு குடிக்க மார்சளி கபம் கோழை இருமல் இவை தீரும் இச்சாபத்தியம்.

பற்ப வகைப்படலம்

முற்றிற்று.

வீரமாமுனி அனுபோகம்

ஐந்தாவது

மாத்திரைவகைப்படலம்.

பேதிக்குபூபதிமாத்திரை

கரப்பாயிருக்கும்.

சுக்கு	விராகனிடை	க	ரசம்	விராகனிடை	க
வெண்காரம்	...	உ	நேர்வாளம்	...	ரு
நெல்லிக்காய் கெந்தகம்		க			

இவ்வைந்தும் கல்வத்திலிட்டு குளிர்ந்ததண்ணீர்விட்டுஒருசாமம் அரைத்து உளுந்துபிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு பிள்ளைகளுக்குஒரு மாத்திரையும் பெரியமனுஷர்களுக்கு வயறுப்பிஷமாயிருந்தால் இரண்டு மாத்திரை அல்லது மூன்றுமாத்திரைகொடுக்க பேதியாகும்.

வயறுவலிக்கு மாத்திரை.

வீரம் ஒருமிளகு எடையெடுத்துக்கொண்டு அதில் ஐந்து மிளகு சேர்த்து கல்வத்திலிட்டு நல்லஜலம் விட்டரைத்து ஆறுமாத்திரை செய்துவைத்திருந்து வேளைஒன்றுக்கு ஒருமாத்திரை சுக்கு கிஷாயத்தில் கொடுக்கவும்.

இரவுஅயராது மாததிரை.

வாளம்	விராகனிடை	க	சூரத்து ஆவாரைத்தூள்		ச
கரியபோளம்	...	உ			

வென்னீர்விட்டரைத்து மாவுதொட்டுக் கொண்டுபெரியகுண்டுமணிபிரமாணம உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி சாப்பிட்டு சாமத்துக்குமேல்-ங-ச-ரு வாயிலபோட்டு இளவென்னீர்கொப்பளித்து முழுங்கவும் விடியகாலத்தில் பேதியாகும் பத்தியமில்லே

வெட்டிவேர்மாத்திரை.

வெட்டிவேர் வடக்கேபோகிறவேர் வெட்டிவந்து மேல்பரணி சீவிப்போட்டு பட்டையையெடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில அஞ்சுநாளஊரவைத்துதேத்தான்கொட்டை பிரமாணம உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு-க கிராணிக்கு சுக்குகியாழத்திலிடவும்-உ - அஜீரணத்துக்கு ஓமம் பொடியில் கொடுக்கவும-ங-மூத்திரபாதைக்கு பசுவின்பாலில்கொடுக்கவும்-ச பெருங்காயம் கூட்டியதண்ணீரால்குடிக்தஎல்லாவிஷமுந்தீரும் நெய்யில்விழுங்கபெருவயறு சூலேயுந்தீரும்-ரு-கோமயத்தில்குடிக்க ஊதுவாதம் சோகையுந்தீரும்-கூ-வேப்பெண்ணேயில சாப்பிட கருங்குஷ்டம் கடிவிஷந்தீரும்-எ-மஞ்சள்பொடியில் கூட்டிட சூலேகுன்மந்தீரும்-அ வெக்காய்ச்சலுக்கு பஞ்சமூலிகைகியாழத்திலிடவும்-கூ-மாந்தத்துக்கு பேயமுசிட்டை கியாழத்திலிடவும்-ய-அதிசாரத்துக்கு மாதளம்பூகியாழத்திலிடவும்-கக-வாந்திக்கு நிலாவிரை கியாழத்திலிடவும்-கஉ கீரிச்சுக்கு அருகம்வேர் கியாழத்திலிடவும்-கங-சூலேவாய்வுக்கு சீரகக்கியாழத்திலிடவும்

சூலேக்குடோரிமுற்றிற்று.

நாலாமுறைகாய்ச்சலுக்குமாத்திரை.

சுத்திசெய்தரசம்	தாம்பரபற்பம்
கெந்தகம்	துருசு
தாளகம்	கெவுரிபாஷாணம்
மனேசிலே	கற்பூரசிலாசித்து
துற்றம்	

இதுகளையெல்லாம் சமனாகக்கூட்டி துளசிச்சாற்றில் மூன்றுநாள் அரைத்து உளுந்துபிரமாணம் மாத்திரைசெய்து நிழலுணர்த்தலாய் உலர்த்தி அந்தசுக்குசாற்றில் ஒரு மாத்திரை உரைத்துக்கொடுக்கவும் இராத்திரியில் அடிக்கிறசுரங்கள் நாலாமுறைகாய்ச்சலும் தீரும்

குளிர்காய்ச்சலுக்கு சீதாராமபாணம்

வெள்ளைப்பாஷாணம் பாகத்தளச்சாற்றில் ஒருநாள் அரைத்து மூன்றுநாள் சிறுநீர்வார்த்து அரைத்து மூன்றுநாள் மிளகுத்தக்காளிச்சார்வாத்தரைத்து பாசிப்பயறு பிரமாணம் மாத்திரைசேர்த்துநிழலுணர்த்தலாய்உலர்த்திபதனம்பண்ணவும் ஒருமாத்திரைசுக்குகியாழத்திலகொடுக்கவும் பாசிப்பயறுகஞ்சிகாய்ச்சிக்கொடுக்கவும் வாந்திகாணும் அதுக்குபிரிதிசாதத்தில் கஞ்சிவார்த்து கொடுக்கவும் இந்தப்படிக்கு மூன்றுநாள் மாத்திரைகொடுக்கவும் குளிர்க்காய்ச்சல் தீரும்

கோழிக்காரம் அரிதாரம் பூதுழச்சிச்சாரம் வார்த்தரைத்து பாசிப்பயறளவு மாத்திரைகள்செய்து நிழலுணர்த்தலாய்உலர்த்திவைக்கவும் ஒருமாததிரைபூதுழச்சாற்றிலே உரைத்து மூன்றுநாள்கொடுக்கவும் குளிர்காய்ச்சல்நிற்கும் கஞ்சிகாய்ச்சிகொடுக்கவும்.

கிருணிவச்சிர கபாடமாத்திரைகள்

சாதிலிங்கம்	மிளகு
சுக்கு	சாதிக்காய்
வெண்காரம்	சாதிபத்திரி
திப்பிலி	கிரும்பு
நற்பாலைவேர்	கழச்சிபருப்பு
நீர்முள்ளிவிரை	அதிவிடையம்
அட்டவாளிவிரை	இலவம்பிசினி
மாம்பிசினி	காசிக்கட்டி
விலாம்பிசினி	புளியம்விரைஓடு
ஆவாரம்வேர்பட்டை	வேப்பம்பிசினி
கரிவேலம்வேர்பட்டை	ஓமம்
கருஞ்சீரகம்	சீரகம்

இவைகளை வகைக்கு இரண்டு விராகனிடை யாகஅத ற்குச்சமனுக அபின் கூட்டி நற்பாலை இலைச்சாரம் விட்டு நாலுநாளரைத்து நற்பாலையிலை கிஷாயம் வைத்தரைத்து வாழைப்பூசாரம் மூன்றுநாள் வார்த்தரைத்து ஊமத்தம் பூச்சாரம் விட்டு மூன்றுநாள் அரைத்து பயறு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுணர்த்தி பதனம் பண்ண வும் பத்தியம் சாதமும் வென்னீருமாகக் கொடுக்கவும்.

ஜன்னிசுரத்துக்கு மகாவயிரவரசம்.

நாபி	இருபி
கெந்தகம்	நிறுவிஷம்
வெண்காரம்	நவச்சாரம்
தாம்பிறபற்பம்	சலாசித்தி
சாதிலிங்கம்	கரியபவழம்
தாளகம்	ஊசிக்காந்தம்
மனேசிலை	ஊமத்தம்விரை
வெள்ளைபாஷாணம்	சுக்கு
கெவுரிபாஷாணம்	திப்பிலி
துத்தம்	மிளகு
துருசு	சித்தரத்தை
அபிரேகம்	

இது சமனுகக்கூட்டி ஊமத்தஞ் சாற்றினுல் பாகத்தை ச்சாற்றினுல்இஞ்சிச்சாற்றினுல் ஒவ்வொரு சாற்றினுல்மூ ன்று நாள் ஒன்பது நாளரைத்து எள்ளுபிரமாணம் மாத்தி ரைசெய்து நிழலுணர்த்தலாய் உலர்த்தி தேங்காய்க் குடுக் கையில் மாத்திரையை வைத்து தவசத்தில் ஒருமாதம்பு தைத்து பதனம்பண்ணவும் ஞாயிறுவருஷத்துக்கு யிருக் கும் ஒரு மாத்திரை இஞ்சிச்சாற்றிலாவது சுக்கு சாற்றிலா வதுவுரைத்துக்கொடுக்கவும் சன்னிசுரம் குளிர்காய்சல்தீ ரும்.

குளிர்காச்சலுக்கு ப்ரதாபருத்திரரசம்.

வெள்ளைபாஷாணம்	காந்தம்
ரசம்	நவச்சாரம்
அரிதாரம்	கரியபவழம்
மனோசிலை	வெண்காரம்
துருசு	துத்தம்

இதுகளை சமனாக நிறுத்துக்கொண்டு ஊமத்தஞ்சாற்றில் மூன்றுநாளரைத்து பாகைத்தழைச்சாற்றில்மூன்றுநாளரைத்து துவரைப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலுணர்த்தலாய்உலர்த்தி தேங்காய்குடுக்கையில் அடைத்து முப்பதுநாளைக்குப்பிறகு தவசத்தில்புதைத்து யெடுக்கவும் ஒருமாத்திரை இஞ்சிபாற்றிலாவது சுக்குகியாழத்திலாவது கொடுக்கவும் குளிர்காய்ச்சல் நிற்கும் பத்தியம் உப்பில்லாமல் அரிசியுடனே பாசிபபயறு கூடப்போட்டு கஞ்சிகாய்ச்சி கொடுக்கவும்

சகலசுரங்களுக்கு அழகியசொக்கன்குளிகைகள்.

நாபி	துத்தம்
சாதிலிங்கம்	துருசி
அரிதாரம்	கடுகுரோகணி
கெவுரிபாஷாணம்	சுத்திசெய்தநேர்வாளம்

இவைகளை சமனாகநிறுத்து பாகையிலைச்சாற்றினாலேயும் இரிசிச்சாற்றினாலேயும் சகாதேவியிலைச் சாற்றினாலேயும் துளசிச்சாற்றினாலேயும் கையாந்தகரைச்சாற்றினாலேயும் இதுவகைக்கு மூன்றுநாளரைத்து கடுகுப்பிரமாணம் குளிகைசெய்துக்கொண்டு நிழலுணர்த்தலாய் உலர்த்திமிளகுபொடியுடனே ஒருகுளிகைகொடுத்தால் சீதசுரம் தீரும் பத்தியம் அரிசியுடனே பாசிப்பயறுபோட்டு கஞ்சிகாய்ச்சி

கொடுக்கவும் அனுபானம் விசேஷங்களாய் கொடுத்தால்சர் வசுரங்களும் தீரும்

குழந்தைகள் சுரத்திற்கு சாத்திரபேதி.

ஏலம்	அதிமதுரம்
கிரும்பு	சுக்கு
சாத்திரபேதி	மிளகு
கோரோசனை	ஓமம்
செங்கழுணிக்கோஷ்டம்	இலுப்பைப்பூ
திப்பிலி	நன்னாறிவேர்
கல்மதம்	சிறுபீளைவேர்
கல்னாரு	குமிளம்பட்டை
லவுங்கப்பட்டை	பெருமரத்துப்பட்டை

இவைகளை சமனாகக்கூட்டி மூலைப்பாலில் வார்த்தரைத்து பாசிப்பயரளவு மாத்திரைசெய்து நிழலுணர்த்தலாய் உலர்த்தி ஒருமாத்திரை மூலைப்பாலில் அரைத்துக்கொடுக்க குழந்தைகள் சுரம்தீரும்

குழந்தைகளுக்குபேதிக்கு

கால்படிவிளக்கெண்ணையில் கற்றாழைச்சோறு எலுமிச்சங்காயளவு இரண்டுகடுக்காயும் பொடிசெய்துபோட்டு மூன்றுயீருள்ளியும் தட்டிப்போட்டு காய்ச்சி ஆறினபிறகு குழந்தைக்கு கொடுக்கவும் பத்தியம் கஞ்சிசாதம்கொடுக்கவும்

சுரத்துக்கு ஆனந்தவைரவன்

சாதிலிங்கம்விராகனிடை	உ	மனோசீலை விராகனிடை	உ
நாவி	உ	வெண்காரம்	உ
கெந்தகம்	உ	சுக்கு	ச
மிளகு	௬	திப்பிலி	ச

இவைகளெல்லாம் கூட்டி எலுமிச்சம்பழச்சார்விட்டு மூன்று ஜாமம் அரைத்து மிளகுகுன்றி பிரமாணம் உருண்

டைசெய்துதிரிகடுகு கியாழத்திலிடவும் இப்படிமூன்றுநாளிடவு
ம்சர்வசுரமும்தீரும்.

விஷசுரத்துக்கு குளிகை.

கெந்தகம் பச்சைநாவி இரதம்மிளகு சேர்வாளம் சுத்திசெய்
ததும்கூட்டிபூனிவிரையிலிடப்பருப்பும் சேர்ச்சமனாகக்கூட்டி இ
ஞ்சிச்சார்விட்டரைத்து உளுந்து பிரமாணம் உருண்டையாய்கு
ளிகை செய்துஇஞ்சிச்சாற்றில்சாப்பிடவிஷசுரம் தீரும்.

சன்னிக்கு ரத்தினதிக்குளிகை

வெண்காரம்	...	...	கெந்தகம்	...	...
இரசம்	...	...	திரிகடுகு	...	...
இந்துப்பு	...	...			

ஒவ்வொன்றுகளஞ்சு சேர்வாளம் இரண்டுகளஞ்சு ரோகணி
நாலுகளஞ்சுசேரக்கூட்டி முலைப்பால்விட்டு ஒருசாமமரைத்துஉ
ளுந்துபிரமாணம்உருண்டைசெய்து ஒருஉருண்டை இஞ்சிச்சாற்
றிலிடவும் இன்னொரு உருண்டைமனோசிலை எலுமிச்சம் பழச்சா
றுவிட்டரைத்து பயறுபிரமாணம் உருண்டையாக குளிகைசெய்
துஒருகுளிகை இஞ்சிச்சாற்றிலிடவும்.

சுரத்துக்கு ஏலாதிகுளிகை

ஏலம்	...	...	இரும்பு	...	...
நெல்லிபருப்பு	...	...	காட்டெருமைப்பால்		...
சீரகம்	...	...	முந்திரிப்பழம்	...	...
மதுரம்	...	...	சந்தனம்	...	...
கொத்துமல்லி	...	...	சிறுகீரைவேர்	...	...
சுக்கு	...	...			

இவைகளைச் சமனாகக்கூட்டி தயிர்தண்ணீர்விட்டரைத்துஒ
ருகளஞ்சுசர்க்கரை கூட்டிக்கொடுக்கவும்தாகப்பிரமைதீரும்.

சீதசுரத்திற்கு குளிகை.

வெள்ளைபாஷாணம்	கழஞ்சு	க
துத்தம்	,,	உ
துருசு	,,	௩

இவைகளை குழிக்கல்லிலிட்டு ஒருசாமம்விடாமல்ஊமத்தஞ்சாறுவிட்டுமிளகு பிரமாணம் உருண்டைபண்ணிகுளிர்வருகிறமுறைமயிலேவிடிய இரண்டுநாழிகை பொழுதுஒருஉருண்டைபசுவின்பாலில் கொடுக்கத்தீரும்.

சுரத்திற்கு மாத்திரை.

நாவி	விராகனிடை	அ	துத்தம்	விராகனிடை	உ
கெந்தகம்	...	சு	துருசு	...	உ
அரிதாரம்	...	உ	வாளம்	...	உ

இவைகளுக்குசரிபாகம் தாப்பூரபற்பம் கூட்டிமத்தித்துகுப்பமேனிதுளசி தும்பை கையாந்தகரைஇந்த நாலுவகை யிலைச்சாறுவிட்டுமத்தித்து இரண்டு சாமம்அரைத்துபானையில் வைத்துக்கொண்டு காலையில் பணவிடைதேனில் இஞ்சிச்சாற்றில் வெல்லத்திலிட தீரும்வியாதிசுரம் தாபசுரம் சுவாசகாசம் தீரும்;

வாலசஞ்சீவி மாத்திரை.

சுக்குதிப்பிலி கிராம்புகருஞ்சீரகம்மிளகு சாதிக்காய்சாபத்திரிஏலம் வாளம் சாதிலிங்கம் சரிகொண்டு எலுமிச் சம்பழச் சாற்றில்ஒருசாமம்அரைத்து பயரளவு மாத்திரைதிரட்டி வைத்துக்கொண்டுகடுகுரோகணி கடுக்காய்சுக்குகியாழத்திலிட சன்னி தீரும்பிள்ளைகளுக்குப்பாலில் கொடுக்கவும் பெரியவர்களுக்கு இரண்டுமாத்திரையும் குழந்தைகளுக்குஒரு மாத்திரையுங்கொடுக்கலாகும்.

வேறு விதம்.

T. 18550

பிள்ளைபச்சிலேபோல் கழிந்தால்வலம் சாத்திரபேதி அதிமதுரம்இதுகள்வகை ஒன்றுக்குஅரை விராகனிடைவாங்கிபழந்தண்ணீர்விட்டரைத்துமூன்றுநாள் காலமேகொடுக்கத்தீரும்.

பிள்ளைகளுக்கு சுரத்திற்கு மாத்திரை.

சிரகம்கருஞ்சிரகம்லசம்பு ஓமம்சுக்குகிராம்பு வசுவாசிமிளகு சாதிக்காய் திப்பிலிபூண்டு தாண்டிக்காய் நெல்லிமுள்ளி கடுகுநேர்வாளம்இதுகள் சமனிடை கொண்டுஇஞ்சிச் சாற்றிலரைத்து மிளகுபிரமாணம்மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டுஒருமாத்திரை முலேப்பாலில்கொடுக்க பிள்ளைகள்மாந்தம் சுரம்சகலமும்தீரும்,

பெருவாரி காயச்சலுக்கு மாத்திரை.

ஆடுதின்னுப்பாளை சூரணமும் லவுங்கப்பட்டை சூரணமும் சமனிடை கூட்டி எலுமிச்சம்பழம் சாறுவிட்டு அரைத்துகுண்டுமணிபிரமாணம் உருண்டைபண்ணி வைத்துக்கொண்டு புருஷருக்குஸ்திரீகளின் சிறுநீரிலும் ஸ்திரீகளுக்கு புருஷர்கள்சிறுநீரிலும் இப்படிமூன்றுநாளிடவும்வெந்நீரில் மூன்றுநாளிடவும் இதற்குதீரும்வியாதி பெருவாரி காய்ச்சல் அவசரக்காய்ச்சல்விச்சுரம் விடாதசுரம்ஒட்டுசுரம் குளிர்சுரம்இதுகள் தீரும்.

விஷபேதிக்குமாத்திரை.

எட்டிவேர் வடக்கேபோகிறவேர்			விராகனிடை	௰
தலேச்சுருளிவேர்	...	...	...	௫
அரிஞ்சிவேர்பட்டை		...	...	௫

கடைசரக்கு திப்பிலிசுக்கு மிளகு ஓமம்பெருங்காயம் வெள்ளைவெங்காயம்வகை ஒன்றுக்குஉ நவிராகனிடை இதுகளெல்லாம் கூட்டி எலுமிச்சம்பழச்சாறுவிட்டு ஒருசாமமரைத்து சுண்டைக்காய்பிரமாணம பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்விஷபேதிகண்டவுடனேறுயினஒருகிளாசு அதிலுரைத்துக்கொடுக்கவும்சீமைக்காடியில் உரைத்துக்கொடுக்கவும்ஓமக்கியாழதகில்கொடுக்கவும் கடும்பத்தியம் எட்டிவேரைசிறுகநருக்கி பசுவின்கோமயத்தில்கொதிக்கவைத்து யெடுத்தால் சுத்தியாகும்அதைகாயவைத்துஅரைக்கவும்.

கோரோசனை மாத்திரை.

கோரோசனை	விராகனி	க	வெட்டிவேர்	விராகனி	க
கோஷ்டம்	...	க	விலாமிச்சைவேர்	...	க
ஏலம்	...	க	சமுத்திரபச்சை	...	க
அதிமதுரம்	...	க	செண்பகப்பூ	...	க
சாதிரபேதி	...	க			

இதுகளெல்லாம்முலைப்பால்விட்டரைத்து கடலைபிரமாணம் உருண்டைபண்ணிவைத்துக்கொண்டு சகலமானமாந்தம்களுக்கும்முலைப்பாலிலிடவும் பெரிய மனிதருக்கு குடல்படுவன் சுரங்களுக்குமுலைப்பாலிலிடவும் சகல வியாதிக்கும் அனுபானமானதியாழத்திலிடவும் கடும்பத்தியம்.

சின்னயேலாதி மாத்திரை.

ஏலம்லவுங்கப்படடை சிரகம்கோஷ்டம் அதிமதுரம்முந்திரிகைப்பழம் கிராம்புசாதிக்காய் வசுவாசி ஓரிலைத்தாமரை நன்னாரிவேர்பற்பாடகம் கோரோசனை இதுகள்வகைஒன்றுக்கு விராகனிடைஒன்றுசேர்த்து இளநீர்விட்டுஅரைத்துகுண்டுமணிபிரமாண

ம்உருண்டைபண்ணி வைத்துக்கொண்டு சுரத்துக்கு அநுபானம் களி-வும்மேகச்சூட்டுக்கு சிரகயொழுத்திலிடவும்பத்தியம் மச்சம் புளிஆகாது

சுரத்துக்கு மாத்திரை.

சுண்ணாம்புகல்லில் சுத்திசெய்த தாளகம் விராகனிடை				க
சுத்திசெய்த லிங்கம்	...	...	...	க
சுத்திசெய்த நேர்வாளம்	...	...	...	க
கடுகுரோகணி	...	...	...	க
நொச்சிக்கொழுந்து	...	...	...	க

இந்த ஐந்து சரக்குகளையும் கல்வத்தில் பொடித்துக்கொண்டு பசும்பால் விட்டரைத்து மிளகு பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சுக்கு கியாழத்தில்தேகப்பலத்துக் கேற்றாப்போல்கொடுத்தால் தீரும் இதைபேதிக்குகொடுக்கவென்றால் மாத்திரை ௪-பொடிசெய்து வாயில்போட்டு ஒருமுணர்சலம் சாப்பிடவும்.

பாலபூபதி மாத்திரை.

வாளம் விராகனிடை			க	கெந்தகம் விராகனிடை	௫௰
சுக்கு	...	...	௨	சூதம்	௰
வெண்காரம்	...	...	௪		

இவைகளைவென்னீரில் ௪ சாமம் அல்லது ௬ சாமம்அரைத்து குண்டுமணிப்பிரமாணம்செய்து வாழைப்பழத்திலாவது டனவெட்டிலாவது அதிமதுரம் கியாழத்திலாவது சாப்பிடவும்.

வாலசஞ்சீவிகுளிகை.

சுக்கு திப்பிலி மிளகு லிங்கம் வெண்காரம் கிராம்பு ஓமம்இந்த ஏழு சரக்கையும் சமனிடை வாங்கி கல்வத்திலிட்டு பழச்சாற்

றால் நன்றாயாட்டி உளுந்துபிரமாணம்குளிகைபண்ணிநிழலிலுல
ர்த்தி சுரங்களுக்கு துளசிசாற்றிலாவது சன்னிசுரமாயிருந்தால்மு
லைப்பாலில் மூன்றுநாள் கொடுக்கவும் ஜலதோஷமாயிருந்தால்வெ
ற்றிலையில்கொடுத்து மென்றுதின்ன தீரும்.

பஞ்சரத்தினகுளிகை.

இரசகர்ப்பூரம்	விராகனி	௧	சவ்வீரம்	விராகனி	௨
இரசம்	...	௧	சுத்திசெய்தவாளம்		௨
சாதிலிங்கம்	...	௧			

இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சார்விட்டரை
த்து இரண்டு வருகிற பதத்தில்கொத்துமல்லி பிரமாணம் உருண
டைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு முலைப்பாலிலாவது
வெந்நீரிலாவது தேனிலாவது இரண்டுமாத்திரை மூன்றுநாளை
க்கு கொடுக்கவும் சன்னிசுரம் மாந்தம் வீக்கம் சுழிகண்ண கபம்வா
தம் வலிகள் தீரும் சுடும பத்தியம்.

இனி இரண்டாங்காண்டத்தில்.

அனேகமுறைகள் விளக்கப்படும்.

மாத்திரைவகைப்

படலம் முற்றிற்று.

குழந்தைவாகடம்.

பிரமமுனி அனுபோகம்.

—(*)—

மாந்தரோகம் வருகிற விதம்.

எருமைப்பால், நெய், கதலிதேங்காய், இளநீர், சு· லை, வெல்லம், புளித்தமோர். மாங்கிஷா, கனிகள், மலைத்துவரை, உளுந்து மொச்சை, புளியங்கொட்டை, உளுவை, வாளைமீன், கெணடை, கிழங்குவகைகள் முதலியவை தாயார் அருந்தி அம்முலைப்பாலைசேய்க்கு ஊட்டினதினால் மாந்தரோகம் வருமதென்றறிக.

உக. மாந்தரோகம் வகை.

க வாமாந்தம்
உ பித்தமாந்தம்
ங செரிமாந்தம்
ச சேஷ்மமாந்தம்
ரு விஷமாந்தம்
சா வாலைமாந்தம்
எ சுரமாந்தம்
அ நீர்மாந்தம்
கூ செரியாமாந்தம்
ய கட்டுமாந்தம்
கக பால்மாந்தம்
கஉ தலையாமாந்தம்
கங எரிமாந்தம்.
கச தலைமாந்தம்
கரு கணமாந்தம்
கசா கலிப்புமாந்தம்
கஎ சுழிமாந்தம்
கஅ முக்குமாந்தம்
ககூ ஜனனிமாந்தம்
உய ஊதமாந்தம்
உக வீக்கமாந்தம்

ஆக இருபத்தொன்றுவகைமாந்தம் உண்டென்றறிக.

மாந்தரோகங்களின் குணம்.

குழந்தை கனமாயிருக்கும், பிரண்டையைப்போல் கால்பின்னும். கண்கள் சிவக்கும், உடம்பில் நோய்காட்டும், கையில்தங்காது, அழுகுரல் தாழ்ந்திருக்கும், கண்குழிந்திருக்கும் வயறுகிழியு

ம், வாய்நாறும், கைகால்கள் குளிர்காணும், பால்உண்ணாது, வாந்திபண்ணும், வாய், நாக்கு, உலர்ந்துகாணும், மயக்கமுண்டாம், பசியில்லாமல் காமவிகாரங்கொண்டவனைப்போல் சோர்ந்துகிடக்கும், சீதமும் மலமும் கலந்துபோகும் கெட்டபால் போலும்,தெளிந்ததண்ணீர்போலும் வயறுகழியும், உள்ளங்கைகால் குளிர்ந்துகாணும், வெதும்பும், கண்சுழலும், தேகம்வியர்க்கும், கண்ணாடியைப்போல் முகமினுமினுப்பாயிருக்கும், மற்ற குணங்களிற் இரண்டாங்காண்டத்தில் முறையிடுவோமாக.

குழந்தைகளுக்கு அவுஷதங்கள்.

மாந்தத்துக்கு பச்சிலைச்சாறு.

நொச்சி	நுணா
பொடுதலை	உத்தாமணி

இந்நான்கும் சமன்கொண்டிடித்துச் சார் பிழிந்துசற்று அடுப்பில்வைத்து காலாழக்குவீதம் மூன்றுநாள்காலையில் கொடுக்கவும், அன்றிமேற்கூறியதைப்போல் நாடோறும் வெவ்வேறுசெய்யவும்.

மாந்தத்துக்கு குழம்பு.

வெற்றிலைக்காம்புஇடை கக	உள்ளி இரண்டிடை
வசம்பு ஐந்திடை	திப்பிலி ஒருஇடை

இவைகளைவெதுப்பி அரைத்து குழந்தைகளுக்கு தக்கபடி வெந்நீரிற்கலந்தியவும்.

மாந்தத்துக்கு குடிநீர்.

ஓமம்	மிளகு
உள்ளி	திப்பிலி

இவைகளைப் பொடித்து துணியில் மூட்டைகட்டி நாழிநீரில் போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

மாந்தத்துக்குக்கியாழம்,

நுணா	உத்தாமணி
நொச்சில்	கெச்சைக்காய்வேர்

இவைகளை வகைக்கு பிடி ஒன்றாக சட்டியில் சருக்கி நாழி நீர்விட்டு அடுப்பேற்றி

ஓமம்	மிளகு
வசம்பு	பொடுதலைக்காய்
சுக்கு	திப்பிலி

இவைகளை வகைக்கு ஒரு விராகனிடை கொண்டு நல்லெண்ணெயிற் சிவக்கவறுத்து பொட்டளமாய்க்கட்டி ஷை நீரில் போட்டு காய்ச்சி ஒரு சங்கு கொடுக்கவும்,

மாந்தத்துக்கு குளிகை,

வாய்விளங்கம் சுட்டஆமைஓடு மிளகு பொடுதலைக்காய்வசம்பு,திப்பிலி,கழற்பருப்பு, இவைகளைச் சமன்கொண்டு பொடுதலைச் சாற்றாலாட்டிப் பட்டாணிப்பிரமாணம் குளிகை செய்யவும்.

அநுபானம்.

ஷை குளிகை ஒன்றைக் கண்டங்கத்திரிக் கியாழத்திலிட மாந்தமும், உத்தாமணிக் கியாழத்தில் வயிர் பொருமலும் வாந்தியும் ஓமக்கியாழத்தில் கழிச்சலும், தேனில்வாத சீதளமும் முலைப்பாலில் மூக்குமாந்தமும், இஞ்சிச்சாற்றில் பயக்கமும் நீங்கும்.

உளமாந்த உட்சுரம் எலும்புருக்கிக்குமருந்து.

புல்லுருவியும், கருப்புக் கட்டியும் எண்ணெயில் அறைத்து சுண்டைக்காயளவு கொடுக்கவும்.

சுழிகணம் உப்பிசம் கோழைக்கட்டு.

இளைப்புக்குமருந்து.

குப்பைமேனிச் சாற்றால் உப்பை அறைத்து வேப்பெண்ணெயில் மத்தித்து இரண்டுகாசெடை ௩-நாள் கொடுக்கவும்.

மாந்ததோஷம வலிப்பு மலக்கட்டுக்கு மருந்து.

நல்வேளையிலை வசம்பு, வள்ளியிலை சமன்கொண்டு இடித்து வெதுப்பிப்பிழிந்து குழந்தைகளுக்குத் தக்கபடி கால்-அரை-முக்கால்-௧-சங்குவீதம் கொடுக்கவும்.

மாந்த வயறுவலி செரியாமாந்தத்துக்கு மருந்து.

உத்தாமணிச்சாறு ஆழாக்கில் வசம்பு திரிகடுகு கோரோசனை இவைகள் வகைக்கு விராகனிடை ௨, உத்தாமணிக்கொழுந்து விராகனிடை ௪ ஒன்றாய்ச்சேர்த்தறைத்து தக்கபடி கொடுக்கவும்.

மாந்தவலிப்பு காக்கைவலிப்புக்கு மருந்து.

கொடிவேலிவேர்பட்டை	விராகனிடை	௫
சங்கன்வேர்த்தோல்		௩
எருக்கன்வேர்பட்டை		௫

இவைகளை வென்னீர்விட்டு நன்றாக அறைத்து கலக்கி வடிகட்டி குங்குமப்பூ ஒருவிராகனிடைபோட்டு தக்கபடிகொடுக்கவும்.

மாந்தவீக்கம் விஷவீக்கம் சுரம் நீர்க்கட்டுக்குக் கியாழம்,

பூவரசன்பழுப்பு விராக ௫ வாமுள்ளி விராக ௫
சங்கன்வேர்ப்பட்டை ௫ முருங்கையீர்க்கு ௫
சிந்திற்கொடி ௫ நீர்முள்ளிவேர் ௫
துளசி ௫ சார்வளைவேர் ௫
பிரமியிலை ௫ மருக்கிழங்கு ௫
தூதுவேளை ௫ சிறுதுறிஞ்சான்வேர் ௫
சத்திசாரணைவேர் ௫ கருஞ்சீரகம் ௫
சுக்கு ௫

இவைகளை ஒருபடி ஜலம்விட்டு ஆழாக்கு ஜலமாகக் காய்ச்சி ௩-நாள் ஆறுவேளை கொடுக்கவும்,

உப்பல் மாந்தத்துக்கு மருந்து,

குப்பைமேனியும் உப்பும்கசக்கி சாறுபிழிந்து இரண்டு கா செடைவீதம் ௩-நாள் கொடுக்கவும்,

அமூர்தாதிக் குளிகை,

அதிமதுரம் வெட்டிவேர்
சண்பகப்பூ கோஷ்டம்
ஏலம் மாசிப்பச்சை
கோரோசனை விலாமிச்சம்வேர்
சாத்திரபேதி

இவைகளைச் சமன்கொண்டு ஆதண்டச்சாறுவிட்டு ஒருஜாமமாட்டி குன்றியளவு உருண்டைசெய்து ஒரு உருண்டையை முலைப்பாலில்தாக்க நீர்க்கண்மாந்தம் அ குடற்படுவன் நீர்ப்பாடு கற்பப்பாடு காவரட்சி சுரம் சூலை எரிவு வெப்புதோஷம் முதலியவை நீங்கும்.

முக்கல்வயிற்றுக்கடுப்புக்கு,

பரித்திப்பிஞ்சி	விடையம்
ஜாதிக்காய்	அரத்தை
கிராம்பு	ஓமம்
இலந்தைவித்து	

இவைகளைச் சமன்கொண்டு பொன்வறுப்பாக்கிச் சூரணித்து திருகடிப்பிரமாணம் கன்னிடையன்தயிரில் கலந்து கொடுக்கவும்.

சீதக்கடுப்புக்கு மருந்து,

பருத்திவித்து, ஜாதிக்காய், நன்னாரிவேர் வட்டத்திப்பிலி சீரகம், கிராம்பு, இவைகளைச் சமன்கொண்டு பொன் வறுப்பாக்கிச் சூரணித்துச் சிறுபுள்ளடிச் சாற்றிலாட்டி பட்டாணியளவுகொடுக்கவும்.

அதிமதுர மாத்திரை,

மதுரம்	மாதளம்பூ
விடையம்	சீரகம்
ஜாதிக்காய்	

இவைகளைச் சமன்கொண்டு பொன்வறுப்பாக்கிச் சூரணித்துமாதளம்பழச்சார் அல்லது புளியாரைச் சாற்றில் ஒரு ஜாமமாட்டி துதளங்காய் பிரமாணம் குளிகைசெய்து கொடுக்க வெப்பு கழிச்சல் தீரும்,

அமிர்த சஞ்சீவிகுளிகை,

சாத்திரபேதி	சந்தனம்
கோஷ்டம்	கடுகு
ஏலம்	ரோசணி
இலவங்கம்	இலுப்பைப்பூ

நன்னாரி மதுரம்
விலாமிச்சு கோரைக்கிழங்கு
வெட்டிவேர் முந்திரிகை
திப்பிலி பேரீச்சு

இவைகளைச் சமன்கொண்டு கருப்பஞ்சாற்றிலாட்டிக் கடலைப்பிரமாணம் குளிகைசெய்து முலைப்பால் வெந்நீரில் கொடுக்க அஷ்டகணங்கள் சுரம் தாகம் முதலியவைகள் நீங்கும்.

பேதிக்கு அமிர்த சஞ்சீவிலிங்கக் குழம்பு,

ஜாதிலிங்கம் விராகநிடை	உ	ஆமணக்குவித்து விராகநி	சு
வெண்காரம்	உ	வாளம்	சு

இவைகளை நன்றாயாட்டி குன்றியளவு உருண்டைசெய்து குளிர்ந்த நீரில்தாக்க பேதியாகும், வெந்நீரில் கொடுக்க பேதிகட்டும் வாதம் குன்மம் கரப்பான் முதலியவைகள் போகும் அன்றி குழந்தைகளுக்குச் சொல்லும் அவுஷதங்களையெல்லாம் இந்நூலிற் கூறியவாறுபோல் சுத்திசெய்துக் கொள்ளவும்,

பூபதிமாத்திரை,

சந்தனம் கோரைக்கிழங்கு
நன்னாரி ஓரிலைத்தாமரை
புளியன்வித்தோடு நாயுருவி
சிறுகிளை வல்லாரை
ஜாதிக்காய் செண்பகம்
ஜாதிபத்திரி கல்நார்
திப்பிலி நற்சீரகம்
இருவாட்சி கருஞ்சீரகம்
ஏலம் இலவங்கப்பட்டை
உருத்திராட்சம் பொன்னாங்கண்ணிவேர்
கோரோசனை குப்பைமேனிவேர்
சாத்திரபேதி

இவைகளைச் சமன்கொண்டு சூரணித்து வல்லாரைச்சாறும், கரணிச்சாறும், சமன்கொண்டு கூடி சரக்குகளை நன்றுயாட்டி தேத்தான் வித்தளவு குளிகைசெய்து தக்க அநுபானங்களாலீயஅட்டகணம் மாந்தம் பொருமல் முதலியவை நீங்கும்.

பேதிரூபதிமாத்திரை.

இரசம் சுக்கு வெண்காரம் கெந்தி வகைக்கு பலம் வ நேர்வாளம் பலம்-௧ இவைகளைக் குளிர்ந்த நீரிலாட்டிப் பனிப்பயறளவு குளிகை செய்து குளிர்ந்த நீரில் தாக்க பேதியாகும் வெந்நீரில் கொடுக்க பேதிகட்டும் வாது மாந்தம் பொருமல் வாதம் முதலியவை போகும்.

ஏலாதிமாத்திரை,

ஏலம்	மாஞ்சில்
மாசிக்காய்	சீரகம்
திப்பிலி	கருஞ்சீரகம்
கோரோசனை	அக்கிராகாரம்
கோஷ்டம்	

இவைகள் வகைக்கு பலம்-வ பொன்வறுப்பாக்கிச் சூரணித்து முலைப்பாலால் ௨-ஜாமமறைற்து கடலைப்பிரமாணம் குளிகை செய்து முலைப்பாவில் கொடுக்க கணக்காய்ச்சல் நீங்கும்.

கட்டுவாதிமாத்திரை,

ஜாதிக்காய்	விடயம்
ஜாதிபத்திரி	புளியாரை
இலவங்கம்	காட்டாத்தி
ஏலம்	அபினி
மதுரம்	கஞ்சா

குராசனிஓமம்	சிறுநாகப்பூ
கோரைக்கிழங்கு	மாதளம்பிஞ்சி
வெந்தயம்	வாழைப்பூ

இவைகள் வகைக்கு பலம்-வ கொண்டிடித்துச் சூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்து வாழைப்பூச்சாற்றிலாவது மாதளம்பழச்சாற்றிலாவது ஆட்டி மிளகுப்பிரமாணம் குளிகைசெய்து சர்க்கரையில் தாக்க பேதிகட்டும்.

கற்பூராதிமாத்திரை,

பச்சைகற்பூரம்	லவுங்கம்
கெந்தி	ஜாதிக்காய்
இந்துப்பு	ஜாதிபத்திரி

இவைகளை வகைக்கு சமூஞ்சி க நிப்பழச்சாற்றிலாட்டி உளுந்தளவு குளிகைசெய்து இஞ்சிச்சுரம் சர்க்கரை சுக்கில் குளிகை ஒன்றைக்கொடுக்க மாங்கிஷ சுரம் முதலாகிய சகல சுரங்களும் விட்டோடிப்போம்.

கோடாசூரிமாத்திரை,

கோரோசனை	விராகனி	உ	நேர்வாளம்	விராகனி	க
கடுகுரோணி		க			

இவைகளை முலைப்பாலாலாட்டிப் பயறளவு குளிகை செய்து குளிகை ஒன்றை இஞ்சிச்சாற்றிலிட வாதசுரமும் முலைப்பாலில் பித்தசுரமும் ஆடாதோடை கண்டங்கத்திரி கியாழத்திலிட சிலேற்பனசுரமும் தூதுவளைப்பிட்டவியலில் சன்னிசுரமும் நீங்கும்.

கோரோசனைமாத்திரை,

மாசிக்காய்	விராகனிடை	உ	கோஷ்டம்	,,	உ
திப்பிலி	,,	உ	கருஞ்சீரகம்	,,	

அக்கிராகாரம் விராக	உ	கோரோசனை ,,	உ
அரத்தை ,,	உ		

இவகளை முலைபாலால் ஒருஜாமமாட்டிப் பயறளவுகுளிகை செய்து பாலையுர்பாலால் குளிகை ஒன்றைகொடு மாந்தகணம். ஜன்னி, பெருமல், சிதளம் முதலியவைபோம்.

சஞ்சீவிகுளிகை,

நாபி சழஞ்சி	க	சுக்கு	க
கருநாபி ...	க	தான்றிக்காய் ...	ச
வாலரசம் ...	க	மிளகு ...	க
கெந்தி ...	க	திப்பிலி ...	க
வெண்காரம் ...	க	வாளம் ...	ரு

இவைகளைக் கையாந்தகரைச்சாற்றால் நாளொன்றுக்கு ஒருஜாமமாக எ-நாள் ஆட்டிகுன்றியளவு உருண்டைசெய்து குளிகை ஒன்றை ஜாதிக்காய் சூரணத்தில்தாக்கமூலவாய்வும், சிறுநீரில் பற்பலவாய்வுகளும், எலுமிச்சம்பழச்சாற்றில் விஷங்களும், நொச்சிச்சாற்றில் மூலம், வலிகுன்மம், முருங்கப்பட்டைச்சாற்றில் குலைரோகமும், வெண்மரிப்பாலில் க்ஷயரோகங்களும், மருதாண்றிச்சாற்றில் ஐவகைப்பிரமியமும், விளக்கெண்ணெயில் மலச்சிக்கலும் சீந்தில்சாற்றிவிட எரிகுன்மமும் நீங்கும்

வீரோசனசண்பகப்பூ மாத்திரை,

ஏலம் பலம்	வ	கடுகுரோகணி பலம்	வ
இலவங்கம் ,,	வ	சண்பகப்பூ ,,	க
கோஷ்டம்	வ	வாளம் ,,	அரை

இவைகளை வெந்நீர்விட்டரைத்து மிளகளவு குளிகைசெய்து தேன், சுக்குக்கியாழத்திலிட பேதியாகும்வசம்பைச்சுட்டுக்கொடுக்க பேதிகட்டும்

கஸ்தூரிமாத்திரை.

கஸ்தூரி விராகனிடை	ச	கோரோசனை விராக.	ங
குங்குமப்பூ "	உ		

இவைகளை முலைப்பாலாலரட்டி குன்றியெடைகுளிகை செய்து தக்கஅனுபானங்களிலிட தோஷசன்னி, மாந்த சன்னி, பித்தசுரம், வாந்தி முதலியவை நீங்கும்.

குருமாத்திரை.

சண்பகப்பூ கழஞ்சி	க	சாத்திரபேதி	
விலாமிஞ்சம்வேர்...	க	மதுரம்	
கோஷ்டம், ...	ச	வெட்டிவேர்	
ஏலம் ...	க	மாசிப்பச்சை	
கோரோஜனை ...	க		

இவைகளை வெட்டிவேர்கியாழத்தில் ஒருஜாமமரட்டி குன்றியளவு உருண்டைசெய்து மாத்திரை ஒன்றைமுலைப் பாலிலாவது இழைத்துக்கொடுக்க மாந்தம் முதலியவைகள் நீங்கும்.

பூரமாத்திரை.

சுத்திசெய்தபூரம் பலம்	உ	வசம்பு பலம்	வ
இலவுங்கம் ...	வ	மாசி ...	வ
ஏலம் ...	வ	அதிவிடயம் ...	வ

இவைகளை மாசிப்பத்திரிவேரின் சாற்றால் ஒரு ஜாமமும், விஷ்ணுகரந்தைசாற்றால் ஒருஜாமமுமரட்டி கொத்துமல்லியளவுகுளிகைசெய்து, குளிகையொன்றை, தேன், முலைப் பாலில் தாக்க மாந்த ரோகங்கள் யாவும்நீங்கும்.

வில்வாதிமாத்திரை.

பச்சைகற்பூரம்	வால்மிளகு
இலவங்கம்	சிறுநாகப்பூ

சீரகம்	சடாமாஞ்சி
கடுகுரோகணி	சுக்கு
ஏலம்	ஆலிப்பருப்பு

இவைகளைச்சமன்கொண்டு பொற்றலையின் சாற்றால் நாலுஜாமமாட்டி ஒன்பதானாள் மிளகளவு குளிகைசெய்து தேன்முலைப்பாலில்தாக்க நாட்பட்ட மாந்தசுரம், முதலிய வைபோம்.

இரசச்செந்தூரமாத்திரை.

இரச்சசெந்தூரம் பலம்	வ	சுக்கு	விராக	வ
கடுக்காய் ,,	வ	மிளகு	,,	வ
தான்றிக்காய் ,,	வ	திப்பிலி	,,	வ
நெல்லிக்காய் ,,	வ	குக்குமப்பூ	,,	வ
ஏலம் ,,	வ	கஸ்தூரி	,,	வ
லவுங்கம் விராகனிடை	க	கோரோசனை	,,	வ

இவைகளைக் கருநொச்சிச்சாறுவிட்டு ஒருஜாமமாட்டி சிறுபயறளவு குளிகைசெய்து துளசிச்சாற்றிலிட வயிறுப் பல், மாந்தம் முதலியவை நீங்கும்.

பாலசஞ்சீவிமாத்திரை.

வெண்காரம் கழஞ்சி	ஙு	கொள்ளுக்காய் ...	ஙு
துத்தம் ,,	ஙு	வேளை	
கோரோசனை ,,	ஙு	கடுகுரோகணி	

இவைகளை அகத்தியிலைச் சாற்றால் ஒருஜாமமாட்டி சிறுபயறளவு உருண்டைசெய்து ஜாபத்திரிசூரணத்திலும், மனைவெல்லத்திலும், வெந்நீரிலும் கொள்ள கனமாந்தம், வயிற்றுளைவு, சன்னிசுரம் முதலியவைநீங்கும்.

இராமபாணக்குளிகை.

மஞ்சள்	சுக்கு
ஜாதிக்காய்	மிளகு

திப்பிலி	மரமஞ்சள்
இலவங்கம்	நாபி
கடுகுரோகணி	

இவைகளைச்சமன்கொண்டு சூரணித்து எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நாலுஜாமம் விடாமலாட்டிப் பயறளவு குளிகைசெய்து தேன் முலைப்பாலில்கொள்ள சகல சுரங்களும், சன்னிமுதலியதும் நீங்கும்.

ஏலாதிமாத்திரை.

ஏலம்	மாஞ்சில்
மாசிக்காய்	சீரகம்
திப்பிலி	கருஞ்சீரகம்
கோரோசனை	அக்கிகிராகாரம்
கோஷ்டம்	

இவைகள்வகைக்கு பலம் கால் பொன்வறுப்பாக்கிச் சூரணித்து முலைப்பாலில் கொடுக்ககணைக்காச்சல் நீங்கும்.

இருமலுக்குச்சூரணம்.

கண்டங்கத்திரிவிரை, அமுக்கரா, திப்பிலிஇவைகளைச்சமன்கொண்டு சூரணித்து ஆவின்பாலில் பிட்டுவைத்து உலர்த்தி சீனி சமன்சேர்த்து திரிகடிப்பிரமாணம் ௰ - நாள் இருவேளைகொள்ள வாங்கிசுரம், இருமல், ஈளைமுதலியதும் நீங்கும்.

சஞ்சீவிகுளிகை.

நபீா	கழஞ்சி	௧	சுக்கு	கழஞ்சி	௧
கருநாபி	...	௧	தான்றிக்காய்...	...	௧
வாலாசம்	...	௧	மிளகு	...	௧
கெந்தி	...	௧	திப்பிலி	...	௧
வெண்காரம்	...	௧	வாளம்	...	௫

இவைகளைக் கையாந்தகரைச்சாற்றால் நாளொன்றுக்கு ஒருஜாமமாக எ-நாள் ஆட்டிகுன்றியளவு உருண்டைசெய்து குளிகை ஒன்றை ஜாதிக்காய்ச்சூரணத்தில் கொள்ளமூலவாய்வும், சிறுநீரில்பற்பலவாய்வுகளும், எலுமிச்சம் பழச்சாற்றில் விஷங்களும் நொச்சிச்சாற்றில் மூலம், வலிகுன்மமும் முருங்கப்பட்டைச்சாற்றில் சூலைரோகமும் வெண்மரிபபாலில் க்ஷயரோகங்களும், மருதாணிச்சாற்றில்ஐவகைப் பிரமியமும், விளக்கெண்ணெயில் மலச்சிக்கிலும் சிந்தில்சற்றிலிட எரிகுன்மமும் நீங்கும்.

பேதிமாத்திரைகள்.

க. சுத்திசெய்தவாளம் பலம்-க, சுக்குத்தூள் பலம் - க, லிங்கம் விராகனிடை-க, இவைகளைக் கல்வததிலிட்டு ரெட்டியால் ங-ஜாமமாட்டி சிறுசுண்டைக்காயளவு குளிகைசெய்யவும், அநுபானம் சர்க்கரை.

உ. சுத்திசெய்தவாளம் பலம் ரு-கடுக்காய்த்தோல் பன்னீர்ப்பூ, இந்துப்பு, ரோகணி, சுக்கு, வெடியுப்பு, வகைக்கு பலம் உ-கல்வத்திலிட்டு நிலாவாரைக் கிழாயத்தில் சு-ஜாமமாட்டி சிறுசுண்டைக்காயளவு குளிகைசெய்யவும். அநுபானம் நிலாவாரைக்கியாழம்.

ங. மிளகு, சுத்திசெய்தவாளம் சமன்கொண்டு சோற்றுப்பு இரட்டிசேர்த்து மலைத்தேனாலாட்டிப் புளியங்கொட்டையளவு குளிகைச்செய்யவும். அநுபானம் சீனி.

சு. முத்துக்கொட்டை பலம் க - சுக்கு பலம் உ-மிளகு பலம் க-வெடியுப்பு பலம் வ-சுத்திசெய்தவாளம் பலம் ங-கல்வத்திலிட்டு மலைத்தேனாலாட்டி பட்டாணிபிரமாணம் குளிகைசெய்யவும். அநுபானம் சீனி.

ரு. மிளகு, சுக்கு திப்லி, சீரகமும், ஓமம், ரோகணி, கூர்மத்தோடு, கோஷ்டம், வகைக்குப்பலம் க - முத்து

க்கொட்டை பலம் ௨, சுத்திசெய்தவாளம், பலம்-௫, இவை களை சம்பழச்சாற்ருலாட்டி, பட்டாணிவீதம் குளிகைசெய் யவும். அநுபானம்-சீரகச்சூரணம்.

௬. சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி வகைக்கு ப்பலம்-௧,வாளம் பலம்-௫, லிங்கம் விராகனிடை - ௧, பூரம் விராகனிடை-௨, இவைகளைக் கல்வத்திலிட்டு, சம்பழச்சாற் ருல் அஜாமமறைத்து சிறியபட்டாணிவீதம் குளிகைசெய் யவும் அநுபானம்-சீனி.

௭. வாளம் இரசபற்பம், இரசச்செந்தூரம், பூரம், வ கைக்குப் பலம்-௧, மிளகு பலம்-௨, இவைகளை நிம்பழச்சாற் ருல் ௨-ஜாமமாட்டி சிறியபட்டாணியளவு குளிகை செய்யவு ம். அநுபானம மிளகுசூரணம்.

குழந்தைகள்வாகடம்

முற்றிற்று.

எண்ணெய்வகைப்படலம்.

ஜாதிக்காய் எண்ணெய்

ஜாதிக்காய் விராகனிடை	உ	செவ்வியம் விராகனிடை	உ
ஜாதிபத்திரி ...	உ	பேரரத்தை ...	உ
ஏலம் ...	உ	பொற்கடுக்காய் ...	உ
கோஷ்டம் ...	உ	தான்றிக்காய் ...	உ
அதிவிடையம் ...	உ	மாசிக்காய் ...	உ
குங்குமப்பூ ...	உ	நற்சீரகம் ...	உ
அதிமதுரம் ...	உ	வால்மிளகு ...	உ
கண்டுபரங்கி ...	உ	குராசாணிஓமம் ...	உ
சித்திரமூலம் ...	உ	சதகுப்பி ...	உ
சுக்கு ...	உ	வசம்பு ...	௪
ஓமம் ...	உ		

மேற்கண்ட சரக்குகளை சூரணித்து.

ஈயத்தண்டு	நாவற்கொழுந்து
பழம்பாசி	விடத்தாரி
இலைக்கொழுந்து	கருவேலம்
துத்தி	சங்கிலி
கெச்சக்காயிலை	கொட்டைகாந்தை
கிலுகிலுப்பை	கடைச்சி
குதிரைவாலி	சிறுபுள்ளடி
கண்டங்கத்திரி	ஜோகி
செருப்படை	துளசி
கோழிஅவரை	தும்பை
ஆடாதோடை	பொடுதலை
வல்லாரை	வேளை
தவசிமுருங்கை	வரப்பூலா

இவைகளை வகைக்கு இலைச்சாறு படி அரைக்கால் விளக்கெண்ணெய் படி-௧ ஒன்றாய்க்கலந்து ஸ்தன்னியப்பால் கால்ஆழாக்கு சேர்த்து திருநீற்றுப்பத்திரிவேரும்,

கரிவேப்பிலை ஈர்க்கு, நறுக்கிக் கூடப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி உச்சிகரண்டிவீதம் கொடுக்க கணம், மாந்தம், நீர், மேகம், கிறந்தி முதலியவை நீங்கும்.

கொதிப்புகணத்திற்கு எண்ணெய்.

சிற்றாமணக்கு	படி	க	காறுள்ளிச்சாறு	படி	வ
சம்பழச்சாறு	...	வ	கருஞ்சீரகம்	பலம்	வ
இலங்கைச்சாறு	...	வ	கைத்றாழைச்சோறு	...	வ

கருஞ்சீரகத்தை பொடித்துப்போட்டு ஏழுதரம் சுத்தி செய்த கற்றாழைச்சோற்றை மேற்கண்ட பலம்விட்டு எல்லாம் ஒன்றாய்க்கலந்து அடுப்பேற்றி கற்றாழைச்சிவந்த சமையத்தில் காய்ச்சி இறக்கி உச்சிக்கரண்டிவீதம் அந்திசந்தி கொடுக்க, கொதிப்புகணம், கஅ-கணைச்சூடு, அத்திசுரம், அஸ்திவட்டை, மேகவகை, பித்தவெட்டை முதலியவைபோகும், இவ்வெண்ணெய் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உதவும்.

மாந்தப்பொருமலுக்கு எண்ணெய்.

விளக்கெண்ணெய்	படி	உ	துளசிசாறு	படி	வ
பேய்மிரட்டிச்சாறு	...	வ	துத்துசாறு	...	வ
பொடுதலைசாறு	...	வ	அகத்தியிலை	...	வ
வேலிசாறு	...	வ	பச்சைமஞ்சள்	...	வ

இவைகளையெல்லாம் சேர்த்துகலக்கி ஓமம் சுட்ட ஆமையோடு, உள்ளி, வசம்பு வகைக்குப்பலம்-வ இடித்துசே எண்ணெயில் ஒருகாசெடை எடுத்து வெண்காயம் பணவெடை இழைத்து கலந்துகொடுக்க, முதல்நாள் பேதி அதிகமாகக்கிளறி மறுநாள் முதற்கொண்டு பொருமல், சத்திமாந்தம் முதலியவை நீங்கும்.

எரிகணத்திற்கு எண்ணெய்.

பழம்பாசிச்சாறு	படி உ	குமரிவேர்படி காலேரிக்கா	
தென்னங்குறும்பைச்சாறு		நுணாசாறு...	...
உள்ளிச்சாறுபடி காலேரிக்கா		எள்ளெண்ணெய் படி	க

இவைகளை ஒன்றுபடுத்தி ஏலம், இலவங்கபட்டை கோஷ்டம், நற்சீரகம், சந்தணம் மதுரம் வகைக்கு கழஞ்சி அரை, பொடிப்போட்டு எண்ணெயைக் கடுபதத்திற்காய்ச்சி இறக்கி வடிகட்டி காசெடை உள்ளுக்குக் கொடுக்கவும்.

முக்குக்கணத்திற்குஎண்ணெய்.

எள்ளெண்ணெய் நாழி	க	குமரிச்சாறு	படி	வ
குழந்தைபால் படி	வ	கண்ணிச்சாறு	...	வ
நிம்பழச்சாறு ...	வ	வில்வம்	பலம்	க
விஷ்ணுகாந்தி பலம்	க	விலாமிச்சு	...	க
கோரைக்கிழங்கு ...	க	ஒரிலைத்தாமரை	...	க
துளசிவித்து ...	க	முருங்கைவித்து	...	க
கோஷ்டம் ...	க	கோங்குபிசின்	...	க
மதுரம் ...	க	ஆவரைபிசின்	...	க
தாளிசம் ...	க	அக்கிராகாரம்	...	க

மேல்சொன்ன சாறுவகைகளை பின்னிட்டு ஒன்ருய்க் கலக்கி மற்றவகைகளை வறுத்துப்பொடித்து மேற்படி எண்ணெயிற்போட்டுக் கடுகுபதமாகக்காய்ச்சி காசெடை உள்ளுக்குக்கொடுத்து இண்டம்தண்டை உலர்த்திநறுக்கி சீரகத்தைப் பொடித்துப்போட்டு தண்ணீர்படி-வ-வார்த்து எட்டிலொன்ருகக்காய்ச்சி கியாழமாய் வார்க்கவும்.

உலர்ந்த தேகத்திற்கும் பதினெட்டுகணம்.

வெட்டை சுரத்திற்கு எண்ணெய்.

எள்ளெண்ணெய்படி	க	க்ற்ருழைச்சோறுதேங்காய்அளவு

இவைகளை ஒன்றாய்க்கலந்து வெந்தயம் ஒரு காசெடை பொடித்துப்போட்டு அதனுடன் ஈருள்ளி பலம் ௧ அறிந்துசேர்த்து அடுப்பேற்றி மெழுகுபதமாகக்காய்ச்சி ஒரு உச்சிகரண்டி வீதம் கொடுக்கவும்.

தோஷம் ௩, மாந்தம் ௩, ௰அ-கணத்திற்கும்

எண்ணெய்.

ஈயத்தண்டு	சத்திசாரணை
தூதுவளை	பூலா
சங்கங்குப்பி	நரிபயற்றன்
உத்தாமணி	பிரமி
பூவரசு	வேளை
குப்பைமேனி	கற்றாழை
ஆடாதோடை	

இவைகளின்வேர் சமன்கொண்டு இடித்துப் பிழிந்தசாறு படி-௧, விளக்கெண்ணெய்படி ௨, ஒன்றுபடுத்தி,

கருஞ்சீரகம்	கோரோஜனை
ஓமம்	சண்பகம்
பூண்டு	வசம்பு
ஜாதிக்காய்	தான்றிக்காய்

இவைகளை வகைக்குப்பலம்-வ பொடித்து ஷை எண்ணெயிற்கலக்கி பதமாய்க்காய்ச்சி வடித்திறக்கி உச்சிக்கரண்டிவீதம் கொடுக்கவும்,

மாந்தகோடரி எண்ணெய்;

ஆடுதீண்டாப்பாளை	மணித்தக்காளி
நல்வேளை	கழற்சி
துளசி	நீலி

இவைகளை வகைக்கு இலைச்சாறுபடி அரைக்கால்ஆவின் நெய்படி-வ ஒன்றுசேர்த்து கஸ்தூரிமஞ்சள், கோஷ்டம், கரு

ஞ்சீரகம், கடுகுரோகணி வகைக்கு விராகனிடை-க, பொடித்துப்போட்டு கடுகுபதமாகக்காய்ச்சி வடிசெய்து அந்திசந்தி காசெடை உள்ளுக்குத்தாக்க சகலமாந்தவலஃககளும் நீங்கி நல்ல இரத்தம்பாவிகுளிர்ச்சிதந்து குழந்தைதேகம்புஷ்டியுண்டாம்

தேங்காய் எண்ணெய்.

ஏலம்	விராகனிடை	க	கருஞ்சீரகம்	விராகனிடை	க
கஸ்தூரிமஞ்சள்	,,	க	கடுக்காய்த்தோல்	,,	க
கார்போக அரிசி	,,	க	நீரடிமுத்து	,,	க

இவைகளை ஊமத்தைக் காயிற்குள்வைத்து சீலைசெய்து காய்மாத்திரம் வேகும்பதமாய்ப் புடமிட்டுப் பின்காய்க்கு உள்ளிருக்கும் சரக்குகளை காயவைத்து இடித்துச் சூரணித்து தேங்காயெண்ணெயால் நன்காட்டி, ஆழாக்குத் தேங்காயெண்ணெயில் கலக்கிமூன்றுநாள் சூரியபுடம்வைத்து எடுத்து சொறிசிரங்கு, கரப்பான், இவைகளுக்கு மேற்பூசநீங்கும்.

மாந்தத்திற்கு நல்லெண்ணெய்.

எள்ளெண்ணெய்	படி	உ	சீரகம்	பலம்	க
மருட்கிழங்கு	பலம்	க	ரோகணி	,,	க
உள்ளி	,,	க	விளங்கம்	,,	க

இவைகளை ஆவின்பாலாலாட்டி ஷை எண்ணெயிற் கரைத்து நிம்பழச்சாறுபடி-வ சேர்த்து பதமாய்க்காய்ச்சி வடிசெய்து இரண்டுகாசெடை உள்ளுக்குக்கொடுக்க மாந்தம்கணம் முதலியவை நீங்கும்.

சூரியபுட நல்லெண்ணெய்.

சிறுபுள்ளடியிலை	அவுரி
கழல்கொழுந்து	பொடுதலை

வகைக்குப்பிடி-க நையபருச்சி ஆழாக்கு நல்லெண்ணெயிற் போட்டு சூரியபுடம்வைத்து உள்ளுக்குக்கொடுத்து மேலும் பூச கணைமாந்தம் போம்,

---

சன்னிசுரத்திற்கு வேப்பெண்ணெய்.

வேப்பெண்ணெய்படி	உ	பாவட்டைச்சார் படி	௧௨
சங்கிலைச்சார்படி	௧௨	முசறுமுட்டை	௧௨

கூ எண்ணெயிற்சேர்த்து

சுக்கு	விராகனிடை	க	மிளகு	விராகனிடை	க
திப்பிலி	,,	க	நற்சீரகம்	,,	க
வசம்பு	,,	க	கருஞ்சீரகம்	,,	க
பூண்டு	,,	க	கஸ்தூரிமஞ்சள்	,,	க

மேல்கண்டவகைகளை பொடித்துப்போட்டு மெழுகுபதமாகக்காய்ச்சிவடிசெய்து துட்டெடைகொடுக்க சன்னி, சுரம், கபம், மாந்தம், முதலியதும் நீங்கும்.

ய௮ - காப்பானுக்கு எண்ணெய்.

பூவரசு	கண்டங்கத்திரி
செங்கத்தாரி	நிலாவாகை

இவைகளை வகைக்கு விராகனிடை ய நறுக்கிக்கியாழமிட்டு.

மிளகு	பரங்கிப்பட்டை
சதகுப்பி	கார்போகஅரிசி
வசம்பு	கடுகு
வலம்புரிக்காய்	சீரகம்
வெள்ளுள்ளி	

இவைகளைவகைக்குக் கழஞ்சி (உ) கொண்டு சூரணித்து முலைப்பாலாலாட்டி கூ கியாழத்தில் கறைந்து வேறுஸ்தனத் தின்பால் படி-வ, விட்டு விளக்கெண்ணை படிசேர்த்துமெழுகு பதமாகக்காய்ச்சி வடிசெய்து உச்சிக்கரண்டி விதம் உள்ளுக்

குக்கொடுத்து மேலும்பூச கரப்பான்-யஅ, மாந்தம், கணம் யஅம் போகும்.

மேகவியாதிகளுக்கு நிலக்கடம்பை எண்ணெய்.

விளக்கெண்ணெய் படி க	நுணா
நிலக்கடம்பையிலை	குமரி
சங்கிலை	கோழிஅவரை
சங்கங்குப்பி	வேலிகாயம்
சிறுசின்னி	

இவைகளின் சாறுவகைக்கு படி அரைக்கால் கழுதை விட்டைப்பால் புங்கம்வேர் சீவின்பால்வகைக்குப் படி அரைக் கால்சேர்த்து பச்சை செங்கத்தாரிப்பட்டை சித்திரமூலவேர் பட்டை வகைக்குபலம்-வ, ஆவின்பாலிலரைத்து கூடப்போட்டு மஞ்சிட்டிவேர் பரங்கிச்சக்கை கார்போக அரிசி வெட்பாலை யரிசி வகைக்கு பலம்-வ, சூரணித்து ஷை எண்ணெயிலொன்று படுத்தி கடுகுபதத்தில் காச்சியிறக்கி வடிகட்டி ஜாதிலிங்கம் விராகனிடை-க, ஆர்க்கப்பொடித்துப்போட்டு உச்சிக்கரண்டி ஒன்றுவீதம் (எ) நாள் சாப்பிடமேகப்படை, மேகத்தடிப்பு, மேகச்சொரி. சிரங்கு மேகவாய்வு, சூதகவாய்வு, கட்டி, புண், கிரந்தி, நுணாக்கிரந்திமுதலியவை நீங்கும், பத்தியம் இறைச்சி, கத்திரிப்பிஞ்சி, முருங்கைப்பிஞ்சி வண்டக்காய், அவரை, துவரை, ஓலைவாளைக்கருவாடு முதலியவை ஆகும், சுட்டபுளிவறுத் தவுப்பு கூட்டவும் நெய் தாளிதத்துக்காம.

மேகத்திறவிளைத்தவர்களுக்கு நல்லெண்ணெய்.

நல்லெண்ணெய்	படி	உ	தேங்காய்பால்	படி	உ
பொடுதலைச்சாறு	,,	உ	வெந்திபம்	பலம்	உஉ

ஊறவைத்து மேற்படி பாலில்விட்டரைத்து பனவெட்டு பலம் உஉ சேர்த்துகரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து காய்ச்சி பதத்திலிறக்கி கடுகுடன்வைத்துக்கொண்டு அந்தி சந்

தி பாக்களவு கடுகும் தின்று உச்சிக்கரண்டியளவு எண்ணெ யும் சாப்பிட்டுவர மேகச்சூடு, மேகவாய்வு, சொரிகைகாலசதி முதலியவை நீங்கும், பத்தியம் புளி, புகை, புலால் நீக்கி நெய் தாளிதத்திற் சேர்க்கவும், மிளகாய்க்கும் பதில் மிளகும், புளி க்குபதில் எலுமிச்சம்பழமும் சேர்க்கலாம் மறுபத்தியமான பிறகு ஸ்நானஞ்செய்யவும்.

குளிர்ச்சிக்கு எண்ணெய்.

ஓரிலைத்தாமரைச்சாறு	படி	உ	கற்றாழைச்சோறு	படி	உ
ஈரவெண்காயச்சாறு	,,	உ	வெந்தயம்	,,	உ
எலுமிச்சம்சாறு	,,	உ			

இவைகளை விளக்கெண்ணெய் படி-க-ல் அறைத்துக் க றைத்துக்காய்ச்சி பதத்தில்வடித்து கரண்டியளவு சாப்பிட உஷ் ஷ்ணகாந்தம், மேகச்சூடு முதலியவைபோகும் இச்சாபத்தியம்.

மண்டைகுடைச்சலுக்கு எண்ணெய்.

மணித்தக்காளி
சீரா செல்லி
பொன்னாங்கண்ணி
வில்வம்
கரிசலாங்கண்ணி

இக்த ஐந்து தினுசும் இடித்து ஆழாக்கு சார்பிழிந்து ஆ ழாக்கு நல்லெண்ணெய்கூடவிட்டு கடுகுபதமாய்க் காய்ச்சியிர க்கி ௩-நாள் வட்டமாக ரு - தலைமுழுக்கு முழுகவேண்டியது ஒவ்வொரு முழுக்கிற்கும் கடுக்கமிளகுநீர் அரைஆழாக்கு குடி க்கவேண்டியது, பகலில் நித்திரைசெய்யவேண்டியது, அன் னியபதார்த்தம் ஆகாது, ஐந்துமுழுக்கில் மண்டைகுடைச்சல் தீரும்.

காதில்சீழ்வடிதலுக்கு எண்ணெய்.

லிங்கம் துட்டிடை, பூரம் துட்டிடையெடுத்து பொடித்து ஒருபலம் நல்லெண்ணெய் அடுப்பில்வைத்து காய்ந்த பிறகு மேஷி தூளைபோட்டு நாயுருவிச்சார் காலணாவெடை விட்டுசற்று நேரம் காய்ச்சியிறக்கிக்கொண்டு பஞ்சியில்தொட்டு காதில் ௨-துளி பிழிந்தால் சீழ்வருதல் தீரும்,

---

சித்தாதி எண்ணெய்.

சித்தாமணக்கு	சேர்	உ	காட்டெருமைப்பால்	பலம்	வ
தேங்காய்பால்	,,	உ	வேலிப்பருத்திச்சாறு	சேர்	உ
காயம்	விராகனிடை	உ	இந்துப்பு	பலம்	வ
வாளம்	பலம்	க	கடுஞ்சீரகம்	,,	வ
உள்ளி	,,	வ	அரிசித்திப்பிலி	,,	வ
கடுக்காய்	,,	க			

இவையெல்லாம் எண்ணெயில் தூள்பொடிசெய்து போட்டு காச்சி பதத்தில் வடிக்கவும் இதற்கு திரும்பியாதி கவுசை பயித்தியம் சூலை ஆம்பல்கட்டி கல்லடைப்பு மலக்கட்டு பெரும் பாண்டு நாவடைப்பு கிரந்தி சிலவிஷக்கடி கண்ணெரிவு வாய் புண்ணு இவையெல்லாம்தீரும்.

திணவுக்குப்பூச எண்ணெய்.

இரசம் விராகனிடை	க	கெந்தகம் விராகனிடை	க

இது இரண்டையும் கல்வத்திலிட்டு துளசிச்சாறு விட்டு அரைத்து அதின்பிறகு எண்ணெயைசேர்த்து அரைத்து உடம்பில் பூசத்தீரும்.

கண்டமாலைக்கு எண்ணெய்.

நல்லெண்ணெய்படி	உ௰	பொரிகாரம் பலம்	வ
நெல்லிக்காய்கெந்தகம் பலம்	உ௰		

கோடிவேலிவேர் இடித்து தேங்காயளவு எடுத்துக்கொண்டு பொரிகாரத்தைப் பொரித்துப்போட்டு. இந்தமருந்து மூன்றும் எண்ணெயில் கலந்து சத்தேலெகாதிக்கவைத்து எடுத்துக்கொண்டு புண்ணிலேயும்பூசி உள்ளுக்கு காசளவுகொடுக்கவும் உப்பு புளி புகையிலைதள்ளி (௬௰) நாளைக்கு பத்தியமாய் இருக்கவேண்டும் கண்டமாலைக்கு வெதுசஞ்சீவி.

அறக்கெண்ணெய்.

அமுக்கு	பலம்	௰௨	கோரைக்கிழங்கு	பலம்	௨
அமுக்குருவேர்	,,	௰௨	செம்பனைங்கட்டை	,,	௨
சித்திரமுட்டிவேர்	,,	௰௨	நன்னாரிவேர்	,,	௨
வெருகங்கிழங்கு	,,	௰௨			

இந்தவரைக்கும் நாலுமறக்கால் தண்ணீர்விட்டு குருணி பாகக்காய்ச்சி வடிகொண்டு தயிருந்தண்ணீர் மூக்குறுணி கூட விட்டு நல்லெண்ணெய் படி. (௭) விட்டுகடைசரக்கு.

சித்தரத்தை	பலம்	௨	கடுகுரோகணி	பலம்	௨
வாய்விளங்கம்	,,	௨	சதகுப்பை	,,	௨
கோஷ்டம்	,,	௨	அதிமதுரம்	,,	௨
செஞ்சந்தனம்	,,	௨	விலாமிச்சம்வேர்	,,	௨
மரமஞ்சள்	,,	௨			

தயிரும்தண்ணீர் வார்த்து சரக்கை அரைத்து எண்ணெய்யில் கூடப்போட்டு பதத்தில் வடித்துக்கொள்ளவும்.

குக்குமப்பூ	விராகனிடை	௨	பச்சகற்பூரம்	விராகனிடை	௨
கோரோசனம்	,,	௨			

ஷெ எண்ணெயில் கலந்து முழுகவும் இதற்கு தீரும் வியாதி நாலாமுறை மூன்றுமுறை ஈளைசுரங்கள் அதிசுரம் இதுமுதலான சுரங்களெல்லாம் தீரும்.

எண்ணெய்வகைப்படலம் முற்றிற்று.

உ

தேவிசகாயம்,

—(❀)—

முக்கியமாய் கவனிக்கவேண்டிய

அனுபோகவயித்திய விளம்பரம்.

ஜெகந்நாதஸ்தலம் கோஷாயிசுவாமிகளின் பிரதமசிஷ்யராகிய செழு
மணவை நல்லண்ணபரிதேசியவர்களும், மேற்படி பரிதேசியாரவர்கள்
மருகரும் மாணாக்கருமாகிய ☞ சிறுமணவூர் முனிசாமி முதலியா
ஷை சித்துப்புருஷருக்குச் சமானமாகிய புண்ணியவான்களின்
கிரகத்தால் எழுதப்பட்ட (அனுபோகவயித்திய பிரம்மரகசியமெ
நூலானது வயித்தியனைவேண்டாமல் தாங்களேசெய்துக்கொள்
ந்த முன்னூறுமுறைகளடங்கிய முதற்காண்டம், 2 - வது, கா
3 - வதுகாண்டம் யென்று முறையே அச்சிட்டு (காண்டம் 1-க்
அணா-8,) ஆக விற்பனைசெய்து வருவதை அந்நூலை யனுசரித்து
லுள்ள முறைகளை கையாண்டுவரும் புண்யவான்களுக்கும், இ
அனேகஜெனங்களுக்கும் சுமாரு 3-4 - வருடமாக பிரங்கமாகத்
வரும்.

இதுகாறும் நமது அனுபோகவயித்திய பிரம்மரகசியத்தைக்
ற்றவரும் கேள்விப்பட்டிருக்கும் மற்றவரும் கவனிக்கவேண்
ஜெகன்னாதஸ்தலம் கோஷாயிஸ்வாமிகள் அனுக்கிரகத்தின்படி ந
ண்பரிதேசி மருகர் சிறுமணவூர் முனிசாமி முதலியாரால் எழுத
பூ, சு, குப்புசாமிமுதலியாரால் சுந்தரவிலாசஅச்சுக்கூடத்தில் ப
கப்பட்டதும், (80) சயிட்டுள்ளதும் கிளேஸ்கடிதமும் கவிக்காப
முள்ளதாய் பார்வையிட்டு வாங்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

தற்காலம் ஆரிய அனுபோகவயித்தியமென்னும் நாதநற்ற
லமாகிய கமலவாணி கண்மணிகளின்வரம்பெற்ற வாழ்க்கையை
அவுழ்தபாகங்களின் அளவுகளை யேறுமாறாக்கி நிறைகளின் நித
றைத்தும் முறைகளை முன்பின்னாக்கி, கைபாகத்தை பொய்பாக
கெட்டிக் கவிக்காபயிண்டை மட்டி அட்டைபயிண்டிலும் உயர்ந்
அயர்ந்ததாளிலும் அந்தமான பதிப்பை மந்தமானபதிப்பாகம், அ
நிதானவிலையின்றி மனம்போனபடி விற்பனைசெய்துவருகின்றன
வாறு பின்னப்படுத்தி அச்சிடுவதற்குக்காரணம் யாதெனில் ஷை அனு
போகவயித்தியபிரம்மரகசியம் கெவர்ன்மெண்டு சட்டப்படி (ரிஜிஸ்தர்
காபிரயிட்டு செய்திருப்பதால் அப்படியேஅச்சிட்டால் பினல்கோர்ட்டு
கேழ்விக்கு ஜவாபுசொல்ல நேரிடுமென்ற கருத்துள்ளவர்களாய் சுத்த
ஆபாசமாகவும் அந்தவிகாரமாயும் பேனா மாறுதல்செய்தும் அச்சிட்டி
ருக்கின்றனர், இதைக் கவனிக்கவேண்டுவது திண்ணம் திண்ணம்,